73

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௪. | 1916-ம் ஆ மே, ஜூன் மீ | இதழ் ௫-௬.

இலௌகிகப் பகுதி.

தமிழில் வடசொல்.

தமிழ்மொழியில் நீண்ட நாளாகவே வடசொற்கள் கலந்து வழங்கப்படுகின்றன. ஆனால், பண்டைநாட்களில் தமிழில் வடசொற்கள் எவ்வாறு வழங்கப்பட்டன என்று இப்போழ்து ஆராய்வோம். எவ்வளவோ நாட்களுக்கு முன்னேயே பிறந்தொழிந்தனவென்று சொல்லப்படும் மிகப் பழைய தமிழ் நூற்கள் வடசொற் கலப்பு உள்ளனவோ இல்லனவோ நமக்குத் தெரியவில்லை. இப்போழ்து நமக்குத் தெரிகின்ற புறநானூறு, திருக்குறள் முதலிய பல பண்டைத் தமிழ் நூற்களில் வடசொற்கள் மிகச் சிலவே ஓரோவிடத்து அருமையாகக் காணப்படுகின்றன. அவையும் வடசொற்றானோ அல்லவோ என்று மயங்கும் வண்ணம் தமிழாகவே திரிந்து காணப்படுகின்றனவேயன்றி வடசொல் உருவாகவே கிடக்கக் காண்கிலம்.

ஆராயுமிடத்து, ஒரு மொழியில் மறுபுலத்துச் சொற்கள் வந்து கலத்தல் இயற்கையே. ஒரு நாட்டார் பிறநாட்டாரோடு

உறவு கொள்ளுகையில், அந் நாட்டு மொழியில் பிறநாட்டுச் சொற்கள் கலவாதிருக்க முடியாது. அதைத்தான் திசைச்சொல் என்று கூறுகின்றனர் இயனூலோர். அங்ஙனமாயின், தென் மொழியிற்போல வடமொழியில் பிறசொற்கள் கலந்துள்ளனவா என்ற வினா நிகழ்தல்கூடும். வடமொழி மற்றைய மொழிகள் போல ஒரு நாட்டாரால் பேசப்படும் மொழியாயிருந்தால் அதில் பிறசொற்கள் நுழையாதிருக்க முடியாது. அது இப்போழ்து பேசப்படுவதோர் மொழியன்றாகலின், பிறசொற்கள் அதனோடு சேர்தற்கு இடமில்லை. ஆனால் வடமொழி எப்போழ்தும் பேசப் பட்ட மொழியன்று என்று எம்மைக் கேட்கவேண்டா, அது எப்போழ்து பேசப்பட்டதோ எமக்குத் தெரியாது. அதுபற்றிய ஆராய்ச்சியும் ஈண்டு நமக்கு வேண்டுவதில்லை. பேசப்படுவது எம்மொழியாயிருப்பினும் அதில் பிறசொற்கள் வந்து கலக்கு மென்பது எவரும் மறுக்க முடியாதது. இது உலகில் ஒவ்வொரு நாட்டாரும் கண்கூடாகக் கண்டறிந்ததே. நிற்க,

பின்னர், தமிழ் நாட்டில் வடசொல் வழக்கு மிகுதியாக, அவ் வழக்கத்தால் அப்போழ்தைய புலவர்கள் தம் தமிழ் நூற் களில் வடசொற்களை மிகுதியாக வழங்கலானார்கள். அச் சொற் களும், தமிழில் வடமொழியாக்கம் பெரியோர் வகுத்த முறைப் படி திரிந்து தமிழாக வழங்கப்பட்டனவேயன்றி வடசொல் உரு மாறாமல் வழங்கப்படவில்லை. அது கம்ப ராமாயணம், காஞ்சிப் புராணம் முதலிய நூல்களைக் காண்பார்க்கு நன்கு விளங்கும்.

இந்நாளிலோ, கற்ற கேட்ட சில தமிழ்ப் புலவரன்றி மற்றையோர், தமிழில் வடசொற்களை உருமாறாமலே யிருத்தல் வேண்டுமென்ற எண்ணத்தோடு அப்படியே யெழுதத் தலைப்படு கின்றார்கள். அங்ஙனம் எழுதுவதால் விளைவது நன்மையா அல்லது தீமையா என்பதை ஈண்டு ஆராயவேண்டுவது நமது கடமையாகும்.

வடசொற்கள் உருமாறாமல் இருத்தல் வேண்டுமென்று அப்படியே யெழுதுபவர்கள் எண்ணம் எத்துணையளவு பயன்படு

கின்றது என்று பார்ப்போம். எடுத்துக்காட்டாக, க்ருஹம், ஹ்ருதயம், ம்ருகம், த்ருடம் முதலிய சொற்களை யெடுத்துக்கொள்வோம். இவ் வடசொற்கள் தமிழில் வழங்கவேண்டுமானல், கிருகம், இருதயம், மிருகம், திருடம் ... என்று வழங்கல்வேண்டும். இதுவே தமிழியலிற் கண்ட முறை. இம்முறை கடந்து க்ருஹம் என வடசொல் லோசை சரியாயிருக்கவேண்டுமென்று இவர்கள் நினைக்கின்றார்கள். அங்ஙனம் நினைக்கின்றார்களே பல்லது இப்படி யெழுதுவதினல் அதன் ஓசை முற்றும் அமைந்திருக்கின்றதா என்று உணர்கின்றார்களில்லை. ஏன்? சரியான ஓசைக்கு க் என்னு மெய்யெழுத்து முதலில் நிற்பது மட்டும் போதியதல்ல. வடமொழியில் நான்கு ககரங்க ளுண்டு. ஒவ்வொன்றிற்கும் ஒலி வேறுபாடுளது. அவற்றுள் மூன்றாவது ககரம் இங்குள்ள ககரமெய். தமிழிலோ ககரம் ஒன்றே. அது வடமொழி முதல் ககரத்தின் ஓசையை யுடையது. ஆகவே மூன்றுவது ககரம் முதற் ககரத்தின் ஓசையில் வழங்கப்படுமானல் அது சரியான வடசொல் லோசையை யெப்படிப் பெறமுடியும்? ஹ்ருதயம், ஹ் என்பது முதலில் நிற்பது சரியேயானலும் இச் சொல்லின் மூன்றுவ தெழுத்தாகிய தகரம் ஓசை வேறுபாடுடையது. ககரம்போலவே ஓசை வேறுபாடுள்ள தகரமும் வடமொழியில் நான்கு வகைப்படும். தமிழில் முதல் தகரம் ஒன்றே. மூன்றுவது தகரமில்லை. அப்போது மூன்றுவது தகரத்தி னேசையை முதல் தகரம் எவ்வாறு பெறமுடியும்? ம்ருகம் இதில் மூன்றுவ தெழுத்தாகிய ககரம் மேற்கூறியதுபோலவே சரியான ஓசையைப் பொருந்தவில்லை. த்ருடம் இதில் முதலெழுத்தாகிய தகரமும், மூன்றுவ தெழுத்தாகிய டகரமும் சரியான ஓசையுடையன வன்று. இதில் மூன்றுவது தகரத்திற்கும் முதல் தகரத்திற்கும், நான்காவது டகரத்திற்கும் முதல் டகரத்திற்கும் ஓசை வேறுபாடமையவில்லை. மற்றவையும் இப்படியே உய்த் துணர்ந்துகொள்க.

இவ் வாராய்ச்சியால் நமக்குக் கிடைத்ததென்னே? தமிழில் எழுதப்படும் வடசொற்கள் சரியான வடசொல்லோசையைப் பெறுதென்பதே. ஒரு மொழியில் பிறமொழிச் சொற்களைச்

சரியான ஓசையோடு எப்படி யெழுதமுடியும். வாழைப்பழம் என்பதை வடமொழியில் சரியாக எழுதமுடியுமா? ஒவ்வொரு மொழிக்கும் வெவ்வே றொலியையுடைய எழுத்துக்களுண்டு. ஆகவே, ஒரு மொழியில் பிறசொற்கள் வந்து வழங்குமானால் அம்மொழிக் கேற்றபடி அவை திரிபடையுமேயன்றி அச் சொற்கள் யாதொரு திரிபுமின்றி அப்படியே நிற்குமென்ல் ஒருவாற்றானும் பொருந்தாது. அன்றியும் அது உலக வழக்கிற்கும் ஒத்ததாயில்லை. ஒவ்வொரு நாட்டினும் பிறநாட்டுச் சொற்கள் சிறிது திரிபடைந்தே வழங்கப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மேல்நாட்டினும் பாருங்கள், இங்க்லீஷ் என்னும் ஆங்கிலச் சொல்லைப் பிராஞ்சுக்காரர் ஆங்ளே என்று கூறுகின்றனர். ப்ரான்ஸ் என்ற சொல்லை இங்க்லீஷ்காரர் ப்ரேஞ்ச் என்று வழங்குகின்றார்கள். இக் கீழ்நாடு ஒன்றே இங்க்லீஷ்காரரால் ஏஷியா என்றும், பிராஞ்சுக்காரரால் அஸ்ஸி என்றும், நம்மவரால் ஆசியா என்றும் வழங்கப்படுகின்றது. இன்னும் மற்றைய மொழிகளில் எவ்வெவ்வாறு வழங்கப்படுகின்றதோ தெரியவில்லை. இப்படியே ஹாலண்ட் என்றும், ஹோல்லாந்த் என்றும், ஒலாந்தா என்றும் ஒரு நாடே ஒவ்வொரு மொழியிலும் திரிபடைந்து வழங்கப்படுகின்றது. இப்படி எவ்வளவோ பார்க்கலாம். விரிவஞ்சி விடுக்கின்றேம். இதுகாறும் கூறியவாற்றால், தமிழில் வடசொற்களை ஓசைகெடாமல் அப்படியே யெழுதவேண்டுமென்று விரும்புபவர்களுடைய எண்ணம் நன்மையடைய முடியாதென்பது பெறப்பட்டது. நன்மையடையாமற் போவதுமட்டுமா? அங்ஙனம் எழுதுதல் தீமையையும் விளைவிக்கின்றது. யாங்ஙனமெனின், கூறுதும்:

எருமையானது நீரைக் கலக்கிச் சேற்றைப் பூசிக்கொண்டு தானும் தூய்மையுறாமல் அந் நீரையும் கெடுத்துவிடுவதுபோல, இயற்கை யழகுக்காகத் தமிழில் உருமாறாமல் எழுதப்படும் வடசொற்கள், ஓசை முதலியன ஒத்துவாராமையினாலே தம்மழகும் கெட்டு அமிழ்தினுமினிய தமிழின் இயற்கை யழகையும் கெடுத்துவிடுகின்றன. வடமொழிப் பற்றுள்ள சிலர் இங்ஙனம் எழுதுவதைப்பார்த்து, பள்ளியிற் பயிலும் நமது தமிழ் மக்களும் அது

போலெழுதித் தமிழின் அழகைக் கெடுக்கின்றார்கள். இதை விட வேறு என்ன தீமைவேண்டும்! ஒவ்வொரு மொழிக்கும் இயற்கை யழகுண்டன்றோ? ஒரு மொழியில் கலக்கும் பிறசொற்கள் அம் மொழிக்கேற்றபடி திரிபடைந்தாலன்றி, அது இயற்கை யழகைப் பெறுதென்பது உறுதி.

தமிழில் இடையிடையே வடசொற்கள் உருமாறாமல் நிற்குமானால், அது ஒரு தாழ்வடத்தில் இடையிடையே பூங்கொத்துகள் இருப்பதுபோல அழகு செய்யும் என்று ஒரு நண்பர் தாமெழுதிய புதுவது புனைதல் என்ற ஒன்றில் பொறித்திருப்பதை யாம் கண்ணுற்றேம். ஓரினத் தொங்கலில் இடையிடையே பூங்கொத்துகளிருத்தல் அழகென்று அவர் சொல்வது சாலவழகு! அவ்வழகின் மதிப்பை அறிஞர்பால் விடுத்தேம். அங்ஙனம் கூறுமவர் எம்மொழியின் இயற்கையழகும் தெரிந்தவரே யல்லரென்று உறுதியாகச் சொல்லுவேம். அது கிடக்க.

தென் மொழியில் வடசொற்களை அப்படியே வரைபவரது எண்ணம் கெட்டதாக எமக்குப் புலப்படவில்லை, அச் சொற்கள் அழகு கெடாமலிருக்க அவர்கள் நினைத்தலின். ஆனால் அதனால் நன்மை பயவாமற்போவதுமன்றித் தீமை விளைதற்கும் இடமாகின்றது. அன்றியும் அங்ஙனம் எழுதுவதற்கு எந்நூலும் இடந்தாவில்லை. அது உலக வழக்கிற்கும் மாறாயிருக்கின்றது. ஆதலின், தமிழில் வடசொற்களை உரு மாறாமலிருக்க நினைத்து அப்படியே யெழுதுபவர்கள், அது முடியாமையால், அம் மொழியின் எழிலுங் கெட்டு அது சேர்ந்த தென்மொழியின் இயற்கையழகும் குன்றுவதை நடுநின்று உண்மையாக உற்று நோக்குவார்களானால், ஒருபோதும் வடசொற்களை அப்படியே வரையமாட்டார்கள், தேனினு மினிக்குஞ் செந்தமிழின் இயற்கையழகையும் கெடுக்கமாட்டார்கள். இவ் வுணர்ச்சி அவர்கட்கு வர அருளுமாறு, எம் மொழிக்கும் இறைவனாகிய கடவுளை இறைஞ்சுகின்றேம்.

பத்திராதிபன்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ச, இதழ் ட, 57-ம் பக்கத் தொடர்ச்சி.)

மஞ்சள், குங்குமம், மாங்கல்யம் முதலியன சுமங்கலியின் மங்களச் சின்னங்கள். குழந்தையேயாயினும் குமரியேயாயினும் கணவனையிழந்தது முதல் அச் சின்னங்களையும் இழந்துவிடவேண்டியது நமது சாம்பிரதாயம் என்று நான் எண்ணியிருந்தேன். பாலிய விதவைகள் புஷ்பவதிகளாகும்வரை மாங்கல்யமாதிய மங்களங்களைப் பூண்டேயிருக்கலாம், அப் பருவத்திற்குப் பின்புதான் அவர்கள் அவைகளை அகற்ற வேண்டும் என்ற கட்டு எனக்குத் தெரியவே தெரியாது. எனது இலௌகிக அறிவு இவ் விஷயத்தில் அவ்வளவுதான். சாவித்திரியோ விதவை என்றறிந்தேன். கழுத்தில் மாங்கல்யமில்லை. நெற்றியில் மாத்திரம் அழகாகக் குங்குமப்பொட்டிருக்கிறது. ஏன்? இதற்கு உத்தரமாகத் தோன்றிய என் அழுக்குச் சிந்தனைகளைக் கூறவேண்டியதிருக்கிறதே. என் மனம் மயங்குகிறது. எழுதும் கை கூசி நடுங்குகிறது. ஆனால் உள்ளதை உள்ளபடி உரைக்கும் கருத்தைத் திடமாகப் பற்றியல்லவோ என் சரிதையை எழுதத் தொடங்கினேன்! ஆகையால் உண்மையையே ஒருவாறு உளறிக் கிறுக்கிவிடுகிறேன்.

"— நாகரிக காலமல்லவோ இது. இன்னும் சாவித்திரியைக் கன்னிகையாகவே பாவித்து மற்றொரு கலியாணஞ் செய்வார்களோ? அவளுக்கும் அந்நோக்க மிருக்குமோ! அதனால்தான் அழியாத குங்குமப் பொட்டோ! அப்படித்தானிருக்கும். நான் எவ்வளவு பாக்யவான்! ஆனால் இப் புதுமைக்கு என் அம்மாள் சம்மதிப்பாளா? என் தகப்பனர்? — யார் சம்மதித்தாலென்ன! சம்மதிக்காவிட்டாலென்ன! சாவித்திரி ஒருத்தி சம்மதம் போதாதா! என்ன எண்ணம்! ஐயோ! அம்மா! நான் சற்புத்திரனல்லவா! — ஆனால், இந்த வேதனையை, இந்தச் சோதனையை என்னால் சகித்திருக்க முடியாது. நான் செத்துப்போய்விட்டால் வெகு உத்தமம்."

சாவித்திரியின் தாய் முகத்தைப் பார்த்தேன் இச் சிந்தனைகளுடன். அலங்கோலமாய் என் இதழ்கள் பதைத்தன. கண்கள் கலங்கிச் சுருங்கின. "அவள் நெற்றியில் சதா குங்குமப்பொட்டு இருப்பதால் இந்தத் துக்கச் செய்தி இதுவரையில் எனக்குத் தெரியாதம்மா. ஆனால் சென்றதை நினைத்துப் பயனென்ன! இனி எல்லாம் சுகமாக முடியும்" என்று மடையனாகக் குழறினேன்.

"இல்லை. நியாயமாக ருதுவாகும் வரையில் அவள், தாலிச்சரடு குங்குமம் இவைகளை விட்டுவிடக்கூடாதுதான். ஆனால் தாலியை எடுக்கும் தரித்திரச் சடங்கை அவளுக்கு நல்ல வயதுவந்த பின் செய்து என் மனங்குமுற வேண்டுமென்று, அந்தப் பாவி செத்தவுடனேயே சூட்டோடு சூடாக, அவள் கோரத் தாலியையும் எடுத்தெறிந்து தொலைக்கும்படி அவள் தகப்பனார் செய்துவிட்டார். ஆனால் அவள் வளரவளர சாஸ்வதி தாயிடம் ஒரே உருக்கமான பக்திகொண்டு அதன் அறிகுறியாகிய குங்குமப்பொட்டில் அதிக பிரியங்கொண்டிருந்தாள். அதைத் தடுப்பது கொடுமை என்றெண்ணி, அவள் வாழ்நாள் முழுவதும் குங்குமப் பொட்டுடன் சாரதாம்பாளுக்கு அடியாளாகப் பரிசுத்தமாக இருந்துவிட்டுப் போகிறாள் என்று நாங்கள் சும்மாவிருந்துவிட்டோம்" என்றனள் சாவித்திரியின் அன்னை.

"சாரதாம்பாளுக்கு அடியாளாகப் பரிசுத்தமாக இருந்துவிட்டுப் போகிறாள்" என்ற மொழிகளைக் கேட்டேன். என் மடச் சிந்தனை, அழுக்குச் சிந்தனை உடனே அதிர்ந்து அழியத் தொடங்கிற்று. "என்ன அற்பனாய்விட்டேன்! அட மிருகமே! பிசாசே! அந்த ஈன வெறியை விட்டொழி" என்று என்னை நொந்துகொண்டிருந்தேன். சாவித்திரி, மாசு என்பதே இன்னதென்றறியாத சாவித்திரி, எப்பொழுதும்போல் நகைமலர்ந்த முகத்துடன் அப்பொழுது எங்கள் முன்பு தோன்றி என் மடிமீ துட்கார்ந்தனள். இருபுறமும் சோர்ந்திருந்த என் சொக்காயின் முன்தானைகளை இணைத்துப் பொத்தான்களைப் பூட்டத் தொடங்கினாள். பத்து வயதுப் பாலிகையாயிருந்தபோதிலும் ஒரு குழக்தையைப்போல, தன் தாய் தந்தையர் மடியில் அமர்ந்திருப்பதுபோல, என் மடிமீதிருந்து பேசுவது அவளுக்குச் சாதாரண வழக்கமாயிற்று. இது உங்களுக்கு விபரீதமாகத் தோற்றலாம். நகைப்பாகவு மிருக்கலாம். எனக்கும் முதன் முதல் பெருத்த லஜ்ஜையாக இருந்தது. ஆனால் அந்தப் பேதையோ, அவ்வாறு, எவ்வாறோ என்னோடு மாசற்றுப் பழகிவிட்டாள். பழகப்

பழக என்னிடத்தும் அவள் மாசற்ற தன்மை படிந்தது. என் லஜ்ஜையும் தீர்ந்தது.

*　　　*　　　*

ஆசிரிய னுரை :— தான் மூன்று வருஷம் எப்., ஏ., வகுப்புகளில் வாசித்து இருமுறை எப்., ஏ., பரீட்சையில் தேறாமையால் மனச்சோர்வுற்றுப் படிப்பை நிறுத்தி, தன் தந்தையின் வர்த்தக வியவகாரங்களில் ஈடுபட்டிருந்தமை, சாவித்திரி பருவமடைந்த பின்னரும் அவளோடு தான் நெருங்கிப் பழகிவந்த தன்மை, அவள் கல்வி முதிர்ச்சி, முதலிய பல விஷயங்களை விஸ்தாரமாக விளம்பி, அந்தப் பெண்ணின் பதினைந்தாம் பிராயத்தில் அவள் தந்தை தேகவியோக மடைந்தமை, அப்பொழுது அவள் பட்ட துயரம் இவைகளை உருக்கமாகக் கூறியிருக்கிறான் ஜனகராஜன். பின்பு அவள் மாமன் அவ் வீட்டில் தன் குடும்பத்தோடு வசித்து வந்தானாம். எருமைபோல் பருத்துக் கறுத்த விகார சரீரமும் பண வெறியும் திருட்டு விழியுமுடைய ஒரு தடியன் என்றவாறு, சாவித்திரியின் மாமனை வர்ணிக்கின்றான். சாவித்திரியின் பிதா இறந்த ஐந்தாம் மாதம் அவளது மாதாவும், தன் மகளைப் பெற்ற நாள் முதல் தன் தேகத்தைச் சார்ந்திருந்த வயிற்றுநோயினால் பெருவருத்தமுற்றுச் சாகுந்தறுவாயி லிருந்தனளாம். இவ் விவரங்களையும் நமது சற்புத்திரன் விரிவாக வரைந்திருக்கின்றான். இச் சரித்திரத்தைப் பிரசுரிக்கத் தொடங்கி ஒன்றரை வருஷங்களாகின்றன. அன்றியும் இச் சரிதம் படிப்போர் பிரியத்தைப் பெறுவதாயில்லை என்று நண்பர்கள் பலர் அறிவிக்கிறார்கள். ஆகையால் கூடிய சீக்கிரத்தில் இதை முடித்துவிடவேண்டுமென்ற ஆத்திரத்துடன் கதாநாயகன் வரைந்திருப்பதில் பல விஷயங்களை விடுத்து முக்கியமான அம்சங்களை மாத்திரம் துரிதமாக அடுக்குவோமாக.

அத்தியாயம் 6.

கதாநாயக னுரை :— அந்த எருமைத் தடியன் வீட்டிலில்லை. அவன் மனைவி உள்ளே சமையலிற் கவனமாயிருந்தாள். சாவித்திரி கட்டிலிற் கிடந்த தன் அன்னையின் அருகே யுட்கார்ந்து அவள் விலாப் புறங்களைத் தன் கரங்களினால் பிடித்துப் பிடித்து நோயை ஆற்ற முயன்றனள். நோயாளியோ உருண்டாள், புரண்டாள். தன் வயிற்றைப் பிசைந்தாள். ஹங், — ஹுங், — ஹங், — ஹாங், — தாயே! — சர்வேசுவரீ! — இந்தப் பொல்லாத நோயை என்னால் தாங்கமுடியவில்லையம்மா!

—என்னை உன் பாதங்களிற் கொண்டுபோய்விடு. ஐயோ! அம்மா! அம்மணி! தாயே!—" என்று பலவாறாகப் பதறுகின்ற பரிதாபகரமான குரலிற் புலம்பினாள். பின்பு "ஜனகம்! ஜனகம்! ஜனகம்!" என்றனள். (தன்னை, அந்த அம்மாள் 'ஜனகம்' என்றழைப்பதும் 'நீ' என்று பேசுவதும் இயல்பாயின வகையை முன்னமே சொல்லியிருக்கின்றான் கதாநாயக ஜனகராஜன்.) ஜனகன் அருகிற் சென்றேன். "என்ன அம்மா?" என்று அவள் முகத்தை உற்று நோக்கினேன். பாவம்! கண்ணீர்விட் டழத்தொடங்கினாள். "நான் போகிறேன். சாவித்திரியை விட்டுப் போகிறேன். அவள் கதி என்னவாகுமோ! ஜனகம்! அவளை ஒரு கண் பார்த்துக்கொள். அவள் மாமனிடம் எனக்கு நம்பிக்கையில்லை. என் சொந்தத் தம்பிதான். ஆனால் நான் உன்னைத்தான் நம்புகிறேன். ஒன்றும் அறியாத செல்வக் குழந்தையாய் வளர்ந்தவள் சாவித்திரி. அப்பா ஜனகம்! அவள் துன்பப்படும்படி பார்த்திராதே. சாவித்திரீ! என் கண்ணே! என் கிட்டவா அம்மா!" என்றனள். புத்திரி தன் கண்கள் கலங்கத் தன் தாயின் முகத்தோடுமுகம் வைத்தாள். அன்னை அதை அன்பாக முத்தமிட்டாள். "ஒரே ஒரு புத்தி சொல்லுகிறேன் உனக்கு. நீ பதினைந்து வயசுப் பாலியப்பெண். யௌவனத்தின் கொடுமையான சோதனைகள் இனிமேல்தான் உனக்குத் தெரியும். எந்தச் சமயத்திலும் நமது அம்மணியை நம்பி, எப்பொழுதும் சுத்தமான கன்னியாயிரு. உன் தலைவிதி அப்படியிருந்தது. கண்ணே! பெண்கள் இரண்டாங் கலியாணஞ்செய்வது நியாயமென்ற புது நாகரிகப் பேச்சுகளினால் உன் மனம் கலங்கக்கூடாது. நீபுருஷனில்லாத சுத்த கன்னியாயிருக்க — ஐயோ! தாயே! அம்மாஅ!" என்று துண்ணென ஊத்த குரல்விட்டுத் தன் மார்பின்மீது கைவைத்தனள். "என்ன அம்மா" என்று நான் பதறினேன். அவள் வாயில் சிவப்பாய் ஒன்று தோன்றியது. அது என்ன? இரத்தம். கண்கள் மூடுண்டன. மகள் "அம்மா! அம்மா! அம்மா! அம்மா!" என்று அழுதழைத்தனள். அம்மாள் பேசவில்லை. சாவித்திரி ஓவெனக் கதறித் தன் கூந்தலைப் பிய்த்துக்கொண்டு அலறி வீழ்ந்தாள். நான் அழாதிருக்க முடியுமா!

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

புதுவைக் கலைமகள் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம்.

தமிழ்நாடு முழுதும் தமிழ்மணம் பரப்பத் தலையெடுத்தோங்கும் கலைமகள் கழகத்தின் ௫-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம், புதுவையில், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது. விழாக் கொண்டாடும் சபையின் அலங்கரிப்பு காண்பவர் கண்களைக் கவர்ந்தது. தெருக்களில், வருக வருக என்று கைநீட்டி யழைப்பதுபோன்று அசைந்தாடுகின்ற கொடிகளின் அழகையும், தமிழ்மணம் வீசும்படி வரவேற்பு வாக்கியங்க ளெழுதப்பட்ட வளைவுகளின் எழிலையும் நோக்குமிடத்து, அக்காலத்து, புதுவை ஓர் புதுமையாகவே காணப்பட்டது.

15-6-16. வியாழக்கிழமை காலையில் கழகத்தாரால் மணக்குள விநாயகர் கோயிலில் ஸ்ரீ விக்கினேசுவர பூசை செய்யப்பெற்றது. இரவு 8 மணிக்கு, கழக விழாவின்பொருட்டு, தமது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ வல்லிதேவ சேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியமூர்த்தியோடு எழுந்தருளிய ஸ்ரீ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளை, கழகத்தாரும் மற்றைய அன்பர்களும் கழகத்தினின்று மங்கள வாத்தியத்தோடு சென்று எதிர்கொண்டு மிக்க வைபவமாக விழாக் கொண்டாடும் சபைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். அக்காட்சி காணத்தக்கதாகவே யிருந்தது. சுவாமிகள் எழுந்தருளினதும் புதுவையில் ஒரு வருடமாக இல்லாத நல்ல மழை அன்று திடீரென்று பெய்ததும் குறிப்பிடத்தகுந்த ஒரு விசேஷ சம்பவமாகும். "புண்ணியவான் அடிவைத்தார் பூமி குளிர மழை பெய்தது" என்ற பேச்சுக்கள் எங்கும் கேட்கப்பட்டன.

16-6-16. வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குச் சபை கூடப்பெற்றது. விழுப்புரம் வாகீச பக்தஜன சபையார் தேவாரபடனம் செய்ததும், கழகத்தார் பிரார்த்திக்க, மகா ஜனங்கள் வேண்டுகோளின்படி சுவாமிகள் அக்கிராசனம் அமர்ந்தருளினார்கள். உடனே காரியதரிசியாகிய ஸ்ரீமான் திருப்புளிசாமி ஐயாவர்களால் வந்தனோபசார பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின் வருடாந்த அறிக்கைப் பத்திரம் படித்து முடிந்ததும், அக்கிராசனாதிபதியவர்கள் அமிழ்த தாரை பொழிவதுபோல் தமது ஆரம்பப் பிரசங்கத்தைச் செய்தருளினார்கள். பின்னர், கழகத்தின் உதவி அக்கிராசனாதிபதியும் கலைமகள் பத்திராதிபருமாகிய

ஸ்ரீமான் சி. பங்காருபத்தரவர்கள், "தெய்வ மிகமேல்" என்ற தலைப்பை வைத்துக்கொண்டு, தோன்றி நின்று அழிகின்ற காரிய ரூபமாகிய இப்பிரபஞ்சத்திற்குக் காரணமாக எந்தப்பொருளுண்டோ அதுதான் தெய்வமென்றும், அது பல காரணங்களால் பல பெயர்களைப் பெறினும் வஸ்துவில் ஒன்றேயென்றும், இவ் வுண்மை யறியாத சிலர் பல தெய்வங்கள் உள்ளனவாகக் கருதி இந் தெய்வம் சிறிது எந்தெய்வம் பெரிது என்று வழக்கிட்டுத் தெய்வநிந்தனை செய்கின்றார்களென்றும், தெய்வ தூஷணம் செய்பவர்கள் அடைவது நிரகேயென்றும், முத்தி விருப்புள்ளவர் தெய்வ நிந்தனைசெய்யாமல் அன்போடு வழிபடல்வேண்டுமென்றும், பல அரிய பெரிய பிரமாணங்களைக்கொண்டு யாவர் மனத்தும் பதியுமாறு விளக்கிக் காட்டினார்கள். கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளையவர்கள் "தொண்டு" என்பதைப்பற்றிப் பேசி, குடும்பத்திலுள்ள பெற்றோர்முதல் அடியார், ஆசாரியர், கடவுள் ஈறாக உள்ள அனைவர்க்கும் இன்னின்ன விதமாகத் தொண்டுபுரிதல்வேண்டும் என்று விளக்கமாகவும், கேட்டோர் மனம் கிளர்ச்சியுறுமாறும் உபன்னியசித்தார்கள். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் அன்று நடந்த பிரசங்கங்களை யெடுத்துப் பாராட்டி யாவரையும் ஆநந்தமுறச் செய்தார்கள்.

17-6-16. சனிக்கிழமை காலையில் மகேசுவரபூசை நடைபெற்றது. மாலை 4 மணிக்குச் சபை கூடிற்று. தேவாரபடனம் நடந்ததும், கழகக் காரியதரிசி ஸ்ரீமான் திருப்புளிசாமி ஐயரவர்கள் "அப்பூதியடிகள்" சரிதத்தை அழகுபடப் பேசி, வருணாசிரமபேதம் பாராமல் பக்தி ஒன்றையே மேற்கொண்டு, பிராமணோத்தமரான அப்பூதியடிகள் வேளாளத் திருமேனியுடைய திருநாவுக்கரசு சுவாமிகளை ஆசாரியராகக்கொண்டு உய்ந்த விதத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். சென்னை வெஸ்லி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "உலகு, உயிர், கடவுள்" என்னும் விஷயத்தை யெடுத்துக்கொண்டு, ஒவ்வொன்றின் இலக்கணத்தையும் நன்கு விளக்கி, இம் முப்பொருளும் யாவர்க்கும் ஒப்ப முடிந்ததென்றும், சித்தாந்திகட்கும் வேதாந்திகட்கும் அனுபவதசையில் யாதொரு பேதமுமில்லையென்றும், அனுஷ்டானக்கிரமத்தில் உள்ள சிறிது வேற்றுமையைக்கொண்டு சண்டையிடுதல் அறிவுடையவர் செய்கையாகாதென்றும் தெளிவாய்ப் பிரசங்கித்தார்கள். சென்னை, பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மையவர்கள் "பெண்மக்களின் கடமை" என்பதை யெடுத்துக்கொண்டு, பெண்கள் இளமையிற் பெற்றவர்கட்கும், பின்னர்க் கணவனுக்கும் அடங்கி நடக்கவேண்டுமென்றும், நகைப் பைத்தியம் கொண்ட நமது பெண்மணி

கள் கற்பு என்னும் ஆபரணத்தைப் பூண்டு தங்களை அழகுபடுத்திக் கொள்ளவேண்டுமென்றும், பிற புருடரை மனத்தாலும் தீண்டவொண்ணாது என்னும் விரதத்தோடு கணவன் குறிப்பறிந்து அவரிஷ்டத்திற்கு மாறுபடாவண்ணம் நடந்துகொள்வதே உத்தம பூஷணம் என்பதை அவர்கள் உணரவேண்டுமென்றும், இவையெல்லாம் அமைவதற்குப் பெண்மக்கள் போதிய கல்வி யறிவு பெறவேண்டுமென்றும் அழகாகவும் அமைதியாகவும் பேசினார்கள். பின்னர்ச் சபாநாயகரவர்கள் இப் பிரசங்கங்களை ஆதரித்துத் தேன்மாரிபொழிந்த அருமை எம்மனோர் எடுத்து இயம்புந் தரத்ததோ!

18-6-16. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குச் சபை கூட, தேவாரபடனம் நடைபெற, புதுவை, செக்ரெத்தாரியா ஜெனெரால் ஸ்ரீமான் A. V. முத்தையமுதலியாரவர்கள் "விவேகமும், வைராக்கியமும்" என்பதை யெடுத்துக்கொண்டு, அவற்றின் இலக்கணங்களை யெடுத்துக்காட்டி, ஒவ்வொரு மனிதனும் அவற்றைப் பெறவேண்டுமென்றும், பெற்றால்தான் நன்மையடைய முடியுமென்றும் சொல்லி அவற்றிற்கு வேண்டிய ஆதாரங்களை மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியோடு தற்கால அனுபவத்தையும் கூட்டி மிகத் தெளிவாகப் பிரசங்கித்தார்கள். சென்னை ஸ்ரீமான் வல்லை. சண்முகசுந்தரமுதலியாரவர்கள் "பற்று" என்றெடுத்து, "பற்றுக பற்றற்றான் பற்றினையப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்னும் திருக்குறளை ஆதாரமாக வைத்துக்கொண்டு பிறப்பிற்கு ஏதுவாகிய பற்றை விடவேண்டுமென்றும், அது விடுதற்குப் பற்றற்றவனுகிய இறைவனது திருவடிப்பற்று நமக்கு வேண்டுமென்றும், அதற்குக் கண்ணப்பநாயனாரே போதிய சான்றென்றும் அழகாக உபன்னியசித்தார்கள். அம்மனூர் ஸ்ரீமான் சதாசிவம்பிள்ளையவர்கள் "செல்வம்" என்றெடுத்துக்கொண்டு, உலகத்தில் பொருட் செல்வம், கல்விச் செல்வம் என இரண்டுவகைச் செல்வமுண்டென்றும், அவற்றுள் பொருட் செல்வம் பலவகையாலும் அழிவுறுமென்றும், கல்விச் செல்வம் எதனாலும் அழியாதென்றும், ஆதலின் அதையே தேடவேண்டுமென்றும் பேசினார்கள். திருவாரூர்க் கமலாசனி பத்திராதிபர் ஸ்ரீமான் தியாகராஜ ஞானியாரவர்கள் "புணை" என்றெடுத்துக்கொண்டு, பிறப் பிறப்பே கடலென்றும், முத்தியே கரையென்றும், கடவுளது திருவடியே புணையென்றும் கூறி, பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்த நாம் முத்தியாகிய கரையை யடைதற்பொருட்டு இறைவனது திருவடியாகிய புணையைப் பெற முயலவேண்டுமென்று பல பிரமாணங்களால் நிருபித்துக் காட்டினார்கள். பின்னர்ச் சுவாமிகள் அவ் வுபன்னியாசங்களின் நயங்களை யெடுத்துப் பாராட்டி ஆநந்த மழை பொழிந்தார்கள்.

மாலை 4 மணிக்குச் சபை கூட, தேவாரபடனம் நடைபெற்றதும், சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் மணி. திருநாவுக்கரசுமுதலியாரவர்கள் "திருவள்ளுவர்" என்பதை யெடுத்துக்கொண்டு, பல ஆதாரங்களைக்கொண்டு அவரது உண்மைச் சரித்திரத்தை நிரூபித்து, அவரருளிச்செய்த திருக்குறளின் சில பாக்களினால் அவரது அபாரசக்தியை இனிது விளக்கி, தேனினுமினிக்கும் செந்தமிழின் பேரழகு பெருக்கெடுக்கப் பிரசங்கித்தார்கள். சென்னை ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் கிளர்க்கு ஸ்ரீமான் S. சச்சிதாநந்தம்பிள்ளை, B. A., L. T., அவர்கள் "சுந்தரர் சரித நுணுக்கம்" என்பதை யெடுத்துக்கொண்டு சுந்தரர் சரித்திரத்தைத் தொகுத்துக் கூறி, சுவாமிகள் சங்கிலி நாச்சியார் திருமணம்வரையில் எல்லாம் சிவச்செயலாகத் தன் செயலற்றிருந்தாரென்றும், அதனால் யாதொரு துன்பமும் அடையவில்லையென்றும், மேற்படி திருமணத்தில் தன்செயல் தோன்றிற்றென்றும், அதனால் கண்ணிழத்தல் நோய்கொள்ளல் முதலிவற்றால் தண்டிக்கப்பட்டுப் பின்னர் ஆட்கொள்ளப்பட்டாரென்றும், ஆதலின், கடவுள் தம்மிடத்து மிக்க அன்புடையவராயினும் அவர்கள் பிழை செய்தால் மறக்கருணையாகத் தண்டிக்காமல் விடாரென்றும், இன்னோரன்ன நுட்பங்களை யெடுத்துக் காட்டி இனிமையாகப் பிரசங்கித்தார்கள். ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் "தமிழர்" என்பதை யெடுத்துக்கொண்டு, தமிழ் இனிமையான மொழியென்றும், பாஷை யுற்பத்திக் கிரமத்தில் அதுதான் முதலில் ஏற்பட்டிருக்கவேண்டுமென்றும், சிறு குழந்தைகள் வாயில் முதல் முதல் தோன்றுகின்ற சொற்களைக்கொண்டே அதனை யூகித்தறியலாமென்றும், குறிஞ்சி, முல்லை முதலிய நிலப் பிரிவுகளைத் தவிர்த்து ஆதியில் தமிழர்களுள் வர்ணபேதமில்லையென்றும், ஆரியர் வந்தபிறகே வர்ணபேதம் கற்பிக்கப்பட்டதென்றும், அதிலிருந்து அநேக ஜாதிகள் ஏற்பட்டு உயர்வு தாழ்வு என்ற வேற்றுமையை யுண்டாக்கி ஒற்றுமையைக் கெடுத்துவிட்டனவென்றும், நமது சமூகத்திற்கே அது ஒரு நோயென்றும், நம் தேசம் முன்னேற்றமடைவதற்கு அந் நோய் அடியோடு ஒழியவேண்டுமென்றும் மனக்கனிவோடு பிரசங்கித்தார்கள். பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மையவர்கள் "விருந்தோம்பல்" என்ற விஷயத்தை யினிமையாகப் பிரசங்கித்து, விருந்தினரை உபசரித்தலை மேற்கொள்ளும் கடமை பெண்மக்களுக்கே அதிக உரிமையுடையதென்றும், அதுவிஷயத்தில் கணவனது குறிப்பிற்கு மாறுபடாவண்ணம் அவர்கள் நடந்துகொள்ளவேண்டுமென்றும், இவ் வருடோற்சவத்தில் உபசாரணைச் சங்கத் தலைவராகிய ஸ்ரீமான் கிரந்தே-சிவசங்கரசெட்டியா

ரவர்களும், அவர்கள் குடும்பத்தாருமே அதற்குச் சான்றாக நின்றார்களென்றும் கூறினார்கள். பின்னர், சபைத் தலைவராகிய சுவாமிகள் அப்பிரசங்கங்களின் அருமைகளெல்லாம் எடுத்துப் பாராட்டி, தமது முடிவுரைப் பிரசங்கமாகிய அமுத மழையைப் பொழிந்து யாவரையும் ஆநந்தக் கடலில் அமிழ்த்தி யருளினார்கள். துறைசை ஸ்ரீமான் ஞானசம்பந்த முதலியாரவர்களால் வாழ்த்துக் கவி படிக்கப்பட்டதும், காரியதரிசியவர்களால் அக்கிராசனாதிபதியவர்கட்கும் வித்வான்களுக்கும் மற்றவர்கட்கும் நன்றியறிந்த வந்தனம் செலுத்தப்பட்டது. குறிப்பிடத்தகுந்த கனவான்கள் பலரும் விஜயம்செய்திருந்தார்கள். தேவாரபடனத்தோடு மங்களகரமாகக் கலைமகள் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் சம்பூர்த்தி யடைந்தது.

வெளியூர் அன்பர்கள் பலரையும் மற்றவரையும் அன்போடு உபசரித்த உபசரணைச் சங்கத் தலைவர் ஸ்ரீமான் கிரந்தே – சிவசங்கரசெட்டியாரவர்கள் அன்புடைமை யாவராலும் எடுத்துப் பாராட்டத்தகுந்தது. கழகத்தின் அவயவிகளது ஒற்றுமையும், அவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாகச் சகல காரியங்களையும் கவனித்த நேர்மையும் அறிஞர்கள் வியக்கத்தக்கனவா யிருந்ததுமன்றி, மற்றவர்களும் அறிந்து பின்பற்றத் தக்கனவாயுமிருந்தன. எல்லாம் வல்ல இறைவ னருளால் இக் கழகம் எல்லா நன்மைகளையும் பெற்றுப் பிறர்க் கிந்து என்றும் நின்று நிலவி உலகெங்கும் செந்தமிழ் மணத்தைச் செவ்வனே பரப்புவதாக. சுபம்.

தி. வடிவேலு.

பெருந்தேவனார் பாரதம்.

தமிழில் மிக்க பெருமையும் பழமையும் வாய்ந்து, கடைச் சங்கத்துக் கடைசிப் பாண்டியனாகிய உக்கிரப்பெருவழுதியார் காலத்து இருந்த **பெருந்தேவனாராற்** பாடப்பெற்ற **பாரதம்** ஒன்றே, பல நாட்களாகத் தமிழ்நாட் டெலவிப் புகழுடைந்திருந்தது. அஃது தொன்மையென்கின்ற உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுளால் இயன்றது. அது பன்னீராயிரம் பாடல்களால் அமையப்பெற்றது என்று, **படிக்காசுப் புலவர்** தாம் பாடிய தொண்டைமண்டலச் சதகத்துள் கூறியிருக்கின்றனர். அவர், நானூற்றைம்பது யாண்டுகட்கு முன் அரசியற்றிய கிருஷ்ண தேவராயர் முதலியோரைத் தம் சதகத்துள் புகழ்ந்து கூறியிருக்கின்ற

மையாலும், அவர் காலம் சற்றேறக்குறைய மூந்நூறு யாண்டுகட் குட்பட்டிருக்கலாமென்று தெரிகின்றமையாலும், மேற்படி பாரதத்தைப்பற்றி அவரது ஆராய்ச்சி நமது ஆராய்ச்சிக்குச் சிறிதும் வேற்றுமை யிராதென்று தோற்றுகின்றது. இப்போழ்து கிடைக்கக்கூடிய பாரதச் செய்யுட்கள், உத்தியோக பருவத்திலும் வீட்டும பருவத்திலுமே மிகுதியாகக் காணப்படுகின்றன். மற்றப் பருவங்களின் பாக்கள் ஒவ்வொன்று தொல்காப்பியம் பொருளதிகார உரையிலும், புறத்திரட்டிலும் பார்க்கப்படுகின்றன.

இந்நூலாசிரியர் இப்போழ்தைக்கு ௨அ00 யாண்டுகட்கு முன்னிருந்தவராதலானும், அவர் காலத்துக்கு ௨000 யாண்டுகட்கு முன் பாரதப்போர் நடந்தமையானும், மேற்படியார் பாரத சரிதம் எழுதுவதற்குப் பல வுண்மைச் செய்திகள் கிடைத்துப் பயன்பட்டன. மேலும், கடல்கொண்டுபோன கபாடபுரத்திருந்து தப்பித்துக்கொண்டுவந்து கடைச் சங்கம் ஏற்படுத்திய பாண்டியன் முடத்திருமாறனுக்குப் பிறகு, ஒரு பாண்டியன் மகளை யாத்திரையாகவந்த அருச்சுனன் மணந்து அவள்பால் ஒரு மகனைப் பெற, அம் மகன் மேற்படி பாண்டியன் சந்ததியில்லாமையால் தானே பாண்டிநாட்டை யாண்டமைபற்றி அவ் வரசன் காலந்தொடங்கி அவன் வழியில் வந்த பாண்டிய வரசர்கட்கு, பஞ்சவர் என்றும் ஒரு பெயர் வழங்குதலாயிற்று. மேற்காட்டிய பஞ்சவர் வழியாக வந்த பாண்டியராகையினலும், ஆசிரியர் காலத்திற்கு ௨000 யாண்டுகட்குட்பட்ட பஞ்சவர் செய்தி நன்ருகப் பிரசித்திபெற்றிருந்தமையினலும், வியாத பாரதத்தினின்று மொழிபெயர்ப்பதினும் நன்ருய் விளங்குவதாய் அவருக்குப் பயன்பட லாயிற்று.

கர்ண பரம்பரையானும் பல தமிழ் நூற்களின் செய்திகளினலும் தெரிந்து எழுதப்பெற்ற பஞ்சவர்.காதைக்கு ஆசிரியர் பாரதம் என்றே பெயர் தந்தனர். அதுபற்றியே பழைய இலக்கண நூலுரைகளில், "முதனூலாற் பெயர்பெற்றன பாரதம் முதலிய" எனக் காணப்படுகின்றது. பெருந்தேவனர் தமது பாரதத்துள், அத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாளையும், தமது காலத்திருந்த தெள்ளாற்றுவென்ற காடவராயனையும் கூறுகின்றமையால் அவர் காஞ்சிபுரத்துப் பிறந்தவர் என்று யூகித்தறியலாம். அவர் நற்றிணையுள் திருமாலையும், குறுந்தொகையுள் முருகவேளையும், ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு முதலியவைகளில் சிவபெருமானையும் கடவுள் வாழ்த்தாகப் பாடியிருத்தலினல், அவரைச் சமயக் கணக்கர் தந்நெறிபோகாத் தமிழ்ச் சமயியென்க. அவர் காலம் ஆராயின், மதுரையில் உக்கிரப் பெருவழுதி அரசாண்டகாலத்தின்

பிற்பகுதியேயாம். மேற்படி வழுதிக்கு முன்னும் பின்னும் இருந்தார் ஔவையார். அவர் அதிகமானால் காஞ்சிபுரத்திருந்த தொண்டைமானிடம் தூதனுப்பப்பட்டதாய்ப் புறநானூற்றினால் தெரிகின்றமையாலும், அத் தொண்டைமானுக்குப் பிறகே காஞ்சியைக் காடவாண்டார் பல்லவராயன் கைக்கொண்டதாக அத்திகோயில் கல்வெட்டின் பாடல்களால் விளங்குகின்றமையாலும், மேற்படி பெருந்தேவனார் உக்கிரப் பெருவழுதியின் காலத்துச் சங்கத்திருந்து பிறகு கச்சியை யாண்ட தெள்ளாற்றுவென்ற காடவராயன் காலத்துப் பாரதத்தைப் பாடி முடித்தாரென்பது நன்றாய் விளங்குகின்றது.

கல்வெட்டுகளினால், பல்லவ வமிசத்திற்றோன்றிக் காஞ்சிபுரத்தை யாண்ட அரசர்களுள், தெள்ளாற்றுவென்ற காடவராயனும், தெள்ளாறெறிந்த நந்திப்போத்தரையனும் தான் நம் மாராய்ச்சிக்குத் தோற்றுபவர்கள். அன்றியும் வேறு நந்திவன்மப் பல்லவரையன் என்றும், நந்திப்போத்தரையன் என்றும் வெள்ளூன்றத்தும், ஊத்திரினும் காணப்பட்ட கல்வெட்டுகளும் உண்டு. ஒவ்வொரு அரசர்களை வேறுபிரித்துக் காட்டுவதற்கே அவரவர்களின் பெயரின் முதலிலோ கடையிலோ வேறு வேறு வீரச்செய்தி முதலிய அடைமொழிகள் கொடுக்கப்படுகின்றன. மேற்காட்டிய ஆராய்ச்சியால் தெள்ளாற்றுவென்ற காடவனுக்கும் இரண்டாயிரம் யாண்டுகட்கு முன்னிருந்து தெள்ளாறெறிந்த பல்லவனுக்கும் இடையிட்ட யாண்டுகள் ஏறக்குறையத் தொள்ளாயிரம் இருக்கலாமென்று பல வழியாகச் சிந்திக்கின்றோம். இவற்றையெல்லாம் பல்லவர் வாலாறுகளைக் குறிப்பிக்கின்றபோழ்து எழுதுவோம். நிற்க,

கடைச்சங்கத்து உக்கிரப்பெருவழுதி காலம் காஞ்சியில் ஔவைக்குப் படைக்கலக்கொட்டில் காட்டிய தொண்டைமான் காலமாதலானும், அத் தொண்டைமானுக்குப் பிறகே காஞ்சியைக் காடவாண்டார் பல்லவராயன் வென்றதாக முதல் இராச இராச சோழன்காலத்து எழுதப்பட்ட கட்டளைப் பாக்களினால் தெரிகின்றமையினாலும், அவ்விருபேரரசர்காலத்தும் அதற்குப் பிறகும் இருந்த தெள்ளாறெறிந்த பல்லவன் காலத்தும் வாழ்ந்து வந்தவரே பாரதம்பாடிய பெருந்தேவனார் என்க. இதுகாறும் நாம் காட்டிய செய்திகளால் ஆசிரியர் பெருந்தேவனார் காலம் இற்றைக்கு இரண்டாயிரத்துத் தொள்ளாயிரம் யாண்டுகட்கு முன்னென்று நன்றாய்ச் சொல்லலாம். அப்பெருந் தகையார் எழுதிய பாரதம் பெரும்பாலும் வெண்பாக்களும், இடையிடையே அரிய தமிழிலக்கண அமைதி வாய்ந்த உரைகளும், ஒவ்வோரிடத்துச் செவ்விய ஆசிரியப்பாக்களும் உடைத்தாகி, அதனுள் வரும் பல ஆரியப் பெயர்களுக்குத் தமிழ்ப்

பெயர்களாகிய கரியவன், (கிருஷ்ணன்) வளிமகன், (வீமன்) கங்கைச் சிறுவன், (பீஷ்மன்) பொன்னவன், (இரணியன்) பொற்கண்ணன் (இரணியாட்சன்) முதலிய எத்துணையோ அரிய சொற் பொதியப்பட்டதாய் விளங்குவதுமன்றி, பாடல்கள் பதினாயிரத்துக்கு மேற்பட்டிருக்கலாம் என்றும் தோன்றுகிறது. இப்போழ்து கிடைக்கும் மேற்படி பாரதப் பாட்டுக்கள் எழுநூற்றுக்குமேலில்லை. அவற்றுள்ளும் உரைகள் பெருந்தேவனார் வாக்காகச் சொல்ல மனம் பொருந்தவில்லை. ஆயினும் பாடல் மிகவும் சுவை வாய்ந்து இருக்கின்றன. மேற்படி பாடல்கள் புகழேந்தியார் பாடலினும் சிறந்தவையாதலினாலும், நள வெண்பா நானூறு பாக்களின் மிக்கு உள்ளபடியாலும் அவற்றை நம் தமிழபிமானிகள் வெளிப்படுத்தின் மிகவும் நலமாயிருக்கும். அப் பெருந்தேவனார் பாரதப் பாட்டுக்களைப் பாடி ஆனந்திப்போர்கட்கு, சமீபகாலத்தில் தோற்றிய வில்லிபுத்தூரார் பாரதமும், மிகச் சமீபகாலத்தில் அதாவது நூறாண்டுகட்கு முன் தோற்றிய நல்லாப்பிள்ளை பாரதமும் எத்திறச் சுவை பயக்கும்? சமயம் வாய்ப்புழி, மேற்படி பாட்டுகளிற் சிலவற்றின் சுவையைத் தெரிவிப்போம்.

திரு. சுப்பிரமணிய தேசிகர்,
சிலாசாசன பரிசோதகர், காஞ்சிபுரம்.

தருணீமணி.

6. படுகோலை! படுகோலை!!

அன்று சிந்தாகுலியாய் நம் தருணீமணி தன் வசதியை நாடினள். மனோவமைதி தேடித் தன் விடுதிக்குட் சென்றனள். செல்லும்பொழுது பத்மினி கால் நீட்டி யுறங்குவதையுங் கவனியாது தன் அறைக்குட் புகுந்தனள்.

சிறிது நேரஞ்சென்ற பின்னர் "நம் பத்மினியம்மாள் இப்படித் தூங்குவது வழக்கம் இல்லையே! ஏதோ புதுமையாகவல்லவோ இருக்கின்றது!!" என்று சொல்லிக்கொண்டே வெளிவந்து நோக்கினள். "அம்மா! அம்மா!" என் றிருமுறை யுரத்துக் கூவினள். அம்மா ளிவ்வுலகத் திருந்தாலல்லவோ ஏழைய ளேங்குதற்குச் சற்றேனுஞ் செவி கொடுத்தேற்பள்?—

யாதொரு சப்தமு மிலது. சந்தியாகாலம். ஆகாயம் முழுவதும் மேற்றிசையில் மூழ்கி மாளும் ஆதவனின் கிரணங்களால் ரக்த வர்ண முள்ளதாகச் செய்யப்பட்டது. கிருஷ்ணபக்ஷ காலமான தால் சந்திரன் இன்னமும் உதிக்கவில்லை. மல்லிகைப் புதர்கள் அடர்ந்த அத் தோட்டத்திடையே ஜன வரவமே யின்றி மூச்சுவிடுஞ் சப்தம்கூட இல்லாது, கீழே ஓர் பிணம் கிடக்க — ஆ! கோரம்!'

என் பத்மினி யிப்படிக்கிடக்கிருள்? ஒருவேளை அவளுக்கு அடிக்கடி வரும் காக்கைவலிப்போ? சற்றுத் தூரத்திலேயே யிருந்து பத்மினியின் உருவத்தை யுற்று நோக்கினள் தருணீமணி. எங்கும் நிச்சப்தம் — பத்மினி யுறங்குபவள்போலில்லை. அவள் சற்றேனும் அசைய வில்லை. திடீரென்று தருணீமணியின் உள்ளத்து ஓர்வித எண்ணம் உதித்தது. ஆ! ஒருவேளை யிறந்துவிட்டாளோ!

"ஐயோ! அசையவில்லையே! மூச்சும் வரவில்லையே! —ஐயோ! இறந்துவிட்டாளோ!" என்று கையைத் தூக்கிப்பார்த்து "இறந்து விட்டாளே!" என்று தரையிற் சாய்ந்தாள் பிணத்தைக் கண்டதும் பயந்து.

விபரீதம்! தன் னன்னையினும் தயவுடனும், வாஞ்சையுடனும் வளர்த்துவந்த அவ் வம்மணியின் ஜீவன் பிரிந்ததும், அதே யுருவம் பீதிக்குப் பாத்திரம் ஆகின்றது. எதுவரையில் மூச்சானது நம் தேகத்திலிருக்கிறதோ அதுவரையிலுமே வீட்டிலுள்ளவர்கள் நம் க்ஷேமத்தை விசாரித்து வருகிருர்கள். பிராணுபாயம் நேர்ந்து ஜீவன் தேகத்தை விட்டுப் பிரிந்தக்கால், சற்றுநேரம் பிரிந்தபோதிலும் "என்னவோ! எங்குப் போனுரோ? எது நேர்ந்ததோ!" எனப் பிரலாபித்தேங்கி நிற்கும் மனைவியும் தன் கணவன் தேகத்தைப் பார்த்துப் பயப்படுகின்ருள். ஆகலினன்றோ நம் சமய குரவராம் சங்கராசாரிய சுவாமிகளும்,

"யாவத் பவனோ நிவஸதி தேஹே
தாவத் ப்ருச்சதி சேலம் கேஹே
கதவதி வாயௌ தேஹா பாயே
பார்யா பிப்யதி தஸ்மிந் காயே." என்றருளினர்.

சந்தேகம்! சந்தேகம்!! தேகத்தோடு கூடியவையாவும் சந்தேகம். சந்தேகம் என்ற பதத்திற்கே தேகத்தோடு கூடியது என்பது பொருள். இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பரென்று எண்ணவே இடமில்லை. இவ் வாழிசூழ் உலகத்துத் துன்பம் இன்பம் கஷ்டம் இஷ்டம் இவை யாவும் சகடக் கால்போன்று சுழன்று சுழன்று செல்கின்றன. இன்

றைக்கு இராஜ்யபாரந் தாங்கிச் செங்கோ னடாத்துஞ் சூரன் மறுநாள் பிக்ஷாபாத்திரம் ஏந்தி யாசகத்திற்குப் புறப்படுகிறான்! இன்றைக்கு லக்ஷாதிகாரி மறுநாள் பிக்ஷாதிகாரி! "மகாவீரன்! சூரன்! தார்மிஷ்டன்! பிரஜைகளுக் கிஷ்டன்!" என்று எல்லோராலும் பூஜிக்கப்படும் ஒருவனது உயிர் தேகத்தைவிட்டுப் பிரிந்தக்கால், பலரும் போற்றிக் களித்த அதேயுடலைக் கண்டாலும் "தீட்டு! ஸ்நானம் செய்தல்வேண்டும்!" என்று கடுகிச் செல்கின்றனர் பலரும். இதுவும் போதாதென அவ் வுடலை இடுகாட்டிற்கு எடுத்துச் சென்று ஒள்ளழலிமத்து இடவும் வேண்டுமாம். இவன் முன்னுளிருந்த நிலை என்னே!

ஏ! தர்மப்ரபோ! யமதர்மராஜ! காலாதீத மஹாகால! உனக்கு அநந்தகோடி நமஸ்காரம்! உன் வல்லமை சாற்ற எம்மால் முடியாது. உனக்குத் தயை தாக்ஷண்யம் என்பதில்லை. கோடீசுவரன், பிக்ஷுகன் என்ற பாகுபாடு உனக்கில்லை. உனக்கு யாவரும் சமமே! அரசரும் அமைச்சரும் பிரபுக்களும் பிரஜைகளும் யாவரும் நினது கட்கத்தின் முன்பு வீழ்ந்து மாள்கின்றனர். நின்கதி மிகவும் விசித்திரமானது. ரயிலோட்டியின் (Engine - driver) ஆளுகைக் கடங்கி ஓடும் நீராவி யந்திரம்போன்று காலச்சக்கரத்தின் ரயத்தை யனுசரித்திருப்பது உன் நடத்தை யாவும். நினக்குச் சுய காக்ஷியில்லை. நீ "சுகசாலி கஷ்டப்படுபவன்" என்பதைப் பாராதவன். அமைச்சர் குழாம் சூழச் சிங்காசனத்திருந்து ஆட்சிபுரியும் மன்னனும் எதிர்பாராத வண்ணம் நினது கரத்திற் படுகின்றனன். தினமும் இரந்து பரிதபித்து, "காலம் வாராதா? நான் மாளேனோ?" என்று உன்னை வேண்டி யழுபவர்களுக்கு உன் தரிசனம் கிடைப்பது கஷ்ட சாத்தியமாயிருக்கிறது. நல்லவர் கெட்டவர் என்பதும் உனக்கு இல்லை. தன் தம்பியை நல்வழிக்குக் கொண்டுவர முயற்சித்துக்கொண்டிருந்த பத்மினியம்மாள் நின் வலையிற் பட்டனள். துன்மார்க்கனாகிய சோமதத்தன் நின்கரத்திற் சிக்கினனில்லை. சிஷ்ட நிக்ரக துஷ்ட பரிபாலனமாகவல்லவோ இருக்கிறது உன் ஆட்சி. ஆனால் நினது நடையைப்பற்றி நான் யாதொரு அபிப்பிராயமும் கொடுக்க வல்லனல்லேன். பத்மினிக்குத் துஷ்ட சகவாசம் கூடாதென்பது உன் கருத்தோ, அல்லது வேறு யாதோ யானறிகிலேன். நிற்க,

நம் கதையைத் தொடர்வோம்.

சில நிமிஷங்களில் ஓர் பெரிய கூட்டம் தோட்டத்திற் கூடியது. "பத்மினியம்மாள் இறந்துவிட்டார்கள்" என்றான் ஒருவன். "வைத்தியரை யழைத்து வாருங்கள் — சீக்கிரம் —" என்றான் சோமதத்தன்.

சேவகனுஞ் சென்றான் சோமனிட்ட கட்டளையைச் சிரமேற் கொண்டு. சோமதத்தனும் தன் சகோதரியின் முகத்தைக் குளிர்ந்த பனி நீரினால் துடைத்துச் சில சிகிச்சைகள் செய்த பின்னர் பத்மினியின் காத்தைத் தன்னிரு கரங்களிற் கொண்டு பிரலாபிக்கலுற்றான். சில நிமிஷங்களில் வைத்தியனும் வந்துசேர்ந்தான். வைத்தியனும் சிறிது நேரம் பத்மினியின் கைந் நாடியைக் கவனித்துப் பார்த்துவிட்டு "ஐயா! செய்யக்கூடிய மனுஷ்யப் பிரயத்தனம் ஒன்றும் இல்லை. நாடி நின்று விட்டது. முகக்குறிகளைக் காணின் சந்தேகாஸ்பதமாய் இருக்கிறது" என்றான்.

'என்ன ?' என்று வினவினன் சோமதத்தன்.

"யாரோ — விஷம் வைத்துக் — கொன்றிருக்கிறார்கள்."

"விஷம் வைக்கவா ? — இல்லை — ஒருவேளை பிசகியிருப்பீர்கள் — பத்மினி தற்கொலைபுரியமாட்டாள் — அதோடு என் சகோதரிக்கு விரோதிகள் யாரும் இல்லையே —" என்றான் சோமதத்தன்.

வைத்தியனோ மீட்டும் "பத்மினி விஷத்தாற்றான் கொலையுண்டிருக்கிறாள்" என்று திடமாகச் சாற்றினன்.

"ஏதாவது சிகிச்சை செய்யமுடியாதா ?" எனக் குழறினன் சோமதத்தன்.

"மனுஷ்யப் பிரயத்தனம் ஒன்றும் இல்லை —" என்றனன் வைத்தியன்.

"ஐயோ — தற்கொலைபுரியும்படி எதுதான் அவளைத் தூண்டி இருக்கும் —" எனப் பிரலாபிக்கலாயினன் சோமதத்தன்.

"ஐயா! — தற்கொலைபுரியமாட்டாள் பத்மினியம்மாள் — அவள் நல்லவள். அவளைப்பற்றி யிப்படிப் பேசுவ தடுக்காது. யாராவதுதான்—" எனத் தேம்பி யழலானாள் தருணீமணி.

"தற்கொலைதான்! பின் யார்தான் அவளுக்குத் தீங்கிழைப் பார்! —" எனக் கலங்கிக் கழறினன் சோமதத்தன்.

அதே சமயத்தில் வீட்டுச் சேவகனாகிய 'காஞ்சீபுரத்தான்' அங்கு வந்து "ஐயோ! இதென்ன வநியாயம்! காலமே என்னைக் கோபித்துக் கொண்டார்களே!—நான் கூட அம்மாளைத் தூஷித்துப் பேசினேனே!— ஐயோ அம்மா! —" எனக் கதறினன்.

'என்னடா ?' — என்று விசாரித்தான் சோமன்.

"சுவாமீ, தருணியம்மா இவ்விடத்தை விட்டு வேறெவ்விடமாவது போகவேணும் என்று கண்டித்தாக. நான் போய் "எம்மா தருணி வீட்டைவிட்டு போகவேணும்?" என்று கேட்டேன் — என ஆரம்பித்தான் காஞ்சீபுரத்தான்.

இதற்குள், தருணீமணியை யுற்று நோக்கிக்கொண்டிருந்த வைத்தியன் அவளைப் பார்த்து "அம்மா! நேற்று நீ என் கடைக்கு வரவில்லையா?" என்றான்.

"நானு ஐயா? —" என்றனள் தருணி கலக்கமுற்று.

"ஆம் — நேற்றுக் காலையில் நீ என் கடைக்கு வந்து பாஷாணம் வாங்கிப் போகவில்லையா? ஆம்! உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்குச் சந்தேகம் அதிகரிக்கிறது. நீதான் —"

"ஆம் ஆம்! எனக்கும் ஞாபகம் வருகிறது. பத்மினியம்மாள்தான் பாஷாணம் வாங்கிவரச் சொன்னார்கள். ஐயாவின் அறையில் எலி இருப்பதாகவும் அதற்கு வேண்டுமென்றுஞ் சொல்லி என்னை யனுப்பினார்கள்" என்றாள் தருணி.

சோமதத்தனை ஓர் முறை நோக்கினன் வைத்தியன்.

"எனக்காகவா? — இல்லையே —" என்றான் சோமதத்தன்.

"அம்மாள் உங்களுக்கு வேண்டுமென்றுதான் சொன்னார்கள். நான் வாங்கிவந்ததும் பாஷாணத்தை எடுத்துக்கொண்டு மாடியை நோக்கிச் சென்றார்கள்" என்றாள் தருணீமணி.

"நான் வாங்கிவரச் சொல்லவில்லை. — ஆ! ஞாபகம் வருகிறது. அம்மாள் நேற்று "காலகோடிவிஷம்" ஒரு சிறு குப்பியிற் கொண்டுவந்து கொடுத்தார்கள் — இதோ" என்று ஒரு சிறு கண்ணாடிக் குப்பியைக் காட்டினன் சோமதத்தன்.

வைத்தியன் அதை யுற்று நோக்கி "ஐயா! இதுதான் இந்தப் பெண் என்னிடம் வாங்கியது — ஆனால் விஷம் குறைச்சலாயிருக்கிறது —" என்றான்.

"இவ்வளவுதான் இருந்தது அம்மாள் என்னிடம் கொடுத்தபோது —" என்றான் சோமதத்தன்.

வைத்தியனும் தருணீமணியைப் பார்த்து "மிகுதியிருந்த விஷத்தை இந்தப் பெண்தான் எடுத்துபயோகித் திருக்கவேண்டும்" என்றான்.

இதற்குள் "தருணி! நீதானோ —" என்றலறினன் பக்கத்திருந்த வேலைக்காரன். 'ஐயோ —' என்று சப்தமிட்டு மூர்ச்சித்தனள் தருணி தன்மீது சாட்டப்படும் குற்றத்தைக் கண்டு.

"ஐயா! இந்தச் சிறுமி செய்திருக்கக்கூடும் அல்லது செய்திருப்பாள் — இவள் விஷம் வைக்கக்கூடும் — என்று நம்புகிறீர்களா?" எனத் தீனஸ்வரத்துடன் கேட்டான் சோமதத்தன். அவன் கண்களில் நீர் பெருகியது.

"ஐயா! உற்று நோக்கினல் எல்லாம் சந்தேகாஸ்பதமாய்த்தானிருக்கிறது. இந்த விஷயங்களில் திடமென்று யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கமுடியாது. எல்லாம் தீர விசாரித்தே சொல்லவேண்டும். தருணி! நீ வீட்டைவிட்டுப் போகவேண்டும் — என்று அம்மாள் சொன்னதாகச் சொல்கிறன் சேவகன். அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு கோபம் இராது! —" என்றாரம்பித்தான் வைத்தியன்.

"ஆனால் அதற்கு முந்தியல்லவோ பாஷாணம் வாங்கிக் கொடுத்தது —" என்று தடுத்தான் அந்தணன்.

"நீங்கள் சாதுவானதால் எல்லோரையும் சாது என்று கருதுகிறீர்கள். எனக் கிந்த விஷயத்தில் சந்தேகமே யில்லை. — இந்த இருவருக்குள் முன்னலேயே பரஸ்பரம் விரோதம் இருந்திருக்கவேண்டும். அதனற்றான் அம்மாள் தருணியை வீட்டைவிட்டுச் செல்லும்படி சொல்லியது" என்றான் வைத்தியன்

"ஐயோ! அப்படியு மிருக்குமா?" என்று தலையி லடித்துக்கொண்டான் சோமதத்தன்.

இதற்குள் வைத்தியன் ஓர் சேவகனை விளித்து ஏதோ ரகசியமாகச் சொல்லி வெளியே அனுப்பினன். சேவகனும் வெளியே சென்றனன். தருணீமணியும் இதற்குள் மூர்ச்சை தெளிந்து "ஐயா! சோமதத்தரே! நான் இப்படிச் செய்வேன் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அவர்கள் என்னைத் தாயாரைப்பார்க்கிலும் அன்புடன் நடத்திவந்தார்கள். அம்மாள் பிழைப்பதாயிருந்தால் என் உயிரையும் விடுவேனே! —" எனக் கலங்கிக் கண்ணீர் பெருகக் கழறினள் தருணீமணி.

"நான் நம்பேன்! — நீ ஒருகாலும் அப்படிச் செய்யமாட்டாய் — நான் உன்னை நம்புகிறேன் —" எனக் கண்ணீர் சொரிந்தான் சோமன்.

"ஐயா! நீங்கள் பரம சாது. அந் நீலியின் கண்ணீரைக் கண்டு கலங்காதீர்கள். நீலிக்குக் கண் நெற்றியில். பெண்கள் சதிகாரிகள்.

எதுவும் முடிக்க வல்லார். நான் என் கருமத்தை முடித்துச் செல்கிறேன்—" என்றான் வைத்தியன்.

"என்ன சொன்னீர்கள்? — இச் சிறுமியா செய்தாளென்று நினைக்கிறீர்கள். ஒருகாலும் அப்படி யிராது! என் உயிரின்மே லாணையிட்டுச் சொல்கிறேன். அவள் குணம் உங்களுக்குத் தெரியாது! அவள் செய்யத் துணியாள்! அவள் ஒரு பாபமும் அறியாள்! —" எனக் கதறினான் சோமதத்தன்.

"நீர் உலகத்தின் தன்மையை யறியாதவர் — பெண்களின் மனதை நன்கறியாதவர் — காலகூட விஷம்! — நீலியின் கண்ணீரைக் கண்டு கலங்கிவிட்டீர்" என்று சமாதானப்படுத்தினான் வைத்தியன்.

அதே சமயத்தில் ஓர் இராணுவன் சேவகனைப் பின்தொடர்ந்தான்.

"ஐயா! இங்கொரு கொலை நடந்திருக்கிறது! சந்தேகம் அச் சிறு பெண்மீதுதான் —" என்றான் வைத்தியன்.

பின்னர்க் கோரமான சப்தங்கள் ஆகாயத்தை யளாவி யொலித்தன. அவற்றை வருணிக்க நம்மால் முடியாது. தருணீமணி மூர்ச்சித்து விட்டாள். சில நிமிஷங்கள் சென்றதும், தான் இரு போர்வீரர்களின் மத்தியில் இருப்புச் சங்கிலிகளால் பிணிக்கப்பட்டுச் செல்வதாகக் கண்டாள். மீண்டும் அன்றைய சம்பவங்கள் ஒன்றின்பின் னொன்றாக அன்னவள் மனத்துத் தோன்றின. மதிமயங்கி மூர்ச்சித்தனள்.

தெருக்கோடியில், இவர்களுக்குப் பின்னால் (நூறு) 100 கஜ தூரத்தில், எஜமானனைப் பின்தொடரும் நாய்போல் கண்ணீ ருகுத்துச் சென்றனன் சின்னசாமி என்னும் தலையாரி.

(வரும்.)

R. வாசுதேவ சர்மா.

சைவசித்தாந்த மகா சமாஜப் பரீக்ஷை விதிகள்.

சைவசித்தாந்த தத்துவ நூல்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலியவற்றையும், சைவபுராணங்களாகிய பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றையும் யாவரும் கற்று அவற்றின்

கண் செறிந்துகிடக்கும் உண்மைகளை உணர்ந்து நலமெய்தவேண்டும் என்னும் நன்னோக்கம்பற்றிச் சைவசித்தாந்த மஹா சமாஜத்தினர் சில பரீக்ஷைகள் நடத்தித் தகுதிக்கேற்றபடி பொற் பதக்கம், வெள்ளிப் பதக்கம் புத்தகங்கள் முதலிய பரிசுகளையும், ஒப்புச் சீட்டும் கொடுக்க முடிவுகட்டி யுள்ளார்கள். அவற்றின் வரலாறு இங்கே குறிக்கப்படுகின்றது.

பரீக்ஷைகள்.

1. சைவபுராண பிரவேச பரீக்ஷை.
2. சித்தாந்த பிரவேச பரீக்ஷை.
3. சைவபுராண இரண்டாம் பரீக்ஷை.
4. சித்தாந்த இரண்டாம் பரீக்ஷை.
5. சைவபுராண பண்டித பரீக்ஷை.
6. சித்தாந்த பண்டித பரீக்ஷை.

என அறுவகைப் பரீக்ஷைகள் நடைபெறும்.

இவ்வருடம் முதலாகையால் முதற் குறித்த சைவபுராண பிரவேச பரீக்ஷை, சித்தாந்த பிரவேச பரீக்ஷை என்னும் இரண்டு பரீக்ஷைகள் மட்டும் நடைபெறும்.

நடைபெறும் இடங்கள்.

1. சென்னை, 2. தஞ்சாவூர், 3. மதுரை, 4. திரிசிராப்பள்ளி, 5. திருநெல்வேலி, 6. கூடலூர், 7. வேலூர், 8. காஞ்சீபுரம் முதலிய பிரபல நகரங்களில் நிகழப்பெறும். அன்றியும், ஒரு நகரத்தில் 6 மாணவர் பரீக்ஷைக்கு வருவதாயின் அந் நகரத்திலும் நடத்தப்படும். ஒரு நகரத்தில் பரீக்ஷைக்கு வரும் மாணவர் தொகை 6-க்குக் குறையின் பரீக்ஷை நடக்கும் அடுத்த நகரத்துக்கு அவர்கள் வருதல் வேண்டும். இது முன்னர் அறிவிக்கப்படும்.

அம்ஸ விவரம்.

மொத்தத்தில் நூறுக்கு 60 அம்ஸம் பெறுபவர் முதல் வகுப்பினராவர். நூற்றுக்கு 40 அம்ஸம் பெறுபவர் இரண்டாம் வகுப்பினராவர். இதனுள் ஒவ்வொரு பரீக்ஷைகளிலும் அதிக அம்ஸம் பெறும் முதன் மூவர்க்குப் பதக்கப் பரிசு கொடுக்கப்படும்.

புராண பரீக்ஷைக்கு முதற் பரிசு ரூபாய் 25 பெறும் ஒரு பொற்பதக்கம்.
" இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கமும், மிகுதி ரூபாயும்.
" மூன்றும் பரிசு வெள்ளிப் பதக்கம்.
சித்தாந்த பரீக்ஷை முதற் பரிசு ரூபாய் 35 பெறத்தக்க ஒரு பொற்பதக்கம்.

,, இரண்டாம் பரிசு ரூபாய் 25 பெறத்தக்க ஒரு பொற்பதக்கம்.

,, மூன்றாம் பரிசு ரூபாய் 15 பெறத்தக்க ஒரு வெள்ளிப் பதக்கம் மிகுதி ரூபாயும்.

புத்தகப் பரிசு விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இப் பரீக்ஷைகட்கு ஆண்பாலாரும் பெண்பாலாரும் வரலாம். பரீக்ஷைக்கு வர விரும்புவோர் 1916-ம் ஞு செப்டம்பர் மீ 30-ம் உக்குள் தங்கள் விண்ணப்பங்களைச் சென்னைச் சமாஜ ஆபீசுக்கு அனுப்பிவிடல் வேண்டும். பரீக்ஷைக்குக் கட்டணத் தொகை அணா நான்கு, தபால் முத்திரையாகவேனும் சிலர் சேர்ந்து மணியார்டர் மூலமாகவேனும் அனுப்பலாம். பரீக்ஷைக்கு வருபவர் தங்கள் விண்ணப்பங்களில் ஒரு தமிழ்ப் பண்டிதர் கையெழுத்தையாவது சைவசித்தாந்த மஹா சமாஜ அத்தியக்ஷர் ஒருவர் கையெழுத்தையேனும் வாங்கி அனுப்புதல் வேண்டும். இவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

காலம்.

1916-ம் ஞு நவம்பர் மீ மூன்றாம் சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை மேல்குறித்த இடங்களில் பரீக்ஷைகள் நடைபெறும். மற்ற விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பரிசுகள் முதலியன அவ்வவ் வருட மஹா சமாஜக் கூட்டத்தில் அளிக்கப்பெறும். அவ்விடங்களுக்கு வருதற்கு வேண்டும் பிரயாணச் செலவும் சமாஜத்தாரில் அளிக்கப்பெறும்.

பாடங்கள் விவரம்.

சைவ புராண பிரவேச பரீக்ஷை.

வசனம்	1.	பெரியபுராண வசனம்.	ஆறுமுகநாவலர் பதிப்பு.
	2.	திருவிளையாடற்புராண வசனம்.	
	3.	கந்தபுராண வசனம்.	

சரித்திரங்கள் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் முதலியன கேட்கப்படும்.

செய்யுள் 1. பெரியபுராணம் முதலிலிருந்து தடுத்தாட்கொண்ட புராணம் முற்றும்.

2 திருவிளையாடற் புராணம்.

(1) இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்.

(2) வெள்ளை யானைக்குச் சாபந் தீர்த்த திருவிளையாடல் இரண்டும் பதப்பொருள், விஷயம் முதலியன கேட்கப்படும்.

மனப்பாடம். தோடு 10, கூற்று 10, பித்தா 10, நீற்றுப்பதிகங்கள் 10, திருத்தொண்டத் தொகை 10. நமச்சிவாயப்பதிகம் 40, திருவடித் திருத்தாண்டகம் 10, திருவாசகம் திருச்சதகம் 100:

ஆக 200 திருப்பாசுரங்கள்.

இலக்கணம் தப்பின்றி எழுதத் தெரிந்தால் போதும்.

சித்தாந்த பிரவேச பரிக்ஷை.

செய்யுள் திருவருட்பயன் மூலமும் நிரம்ப அழகியர் உரையும். விஷயங்கள் முதலியன கேட்கப்படும்.

மனப்பாடம் 1. சிவஞானபோத 12 சூத்திரங்கள் மூலமட்டும். 2. சிவஞானசித்தியார் சுபக்கம் முத லிரண்டு சூத்திரங்கள் மூலமட்டும்.

இலக்கணம் பிழையின்றி எழுதத் தெரிந்தால் போதும்.

குறிப்பு:— மேற்குறித்த இரண்டு பரீக்ஷைக்கும் 20 வயதுக்கு மேற்படாதவர் மாத்திரமே வருவதற்கு உரியர். பெண்பாலர்க்கு இவ்விதியில்லை. இது சம்பந்தமாக இன்னும் ஏதேனும் அறிய விரும்புவோர் சைவசித்தாந்த மஹா சமாஜ காரியதரிசிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பாடங்கள் தவிர ஏனைய விதிகள் சிலமாறுதற்கும் உரியவை.

வேண்டுகோள்.

இப் பரீக்ஷைகளை இனிது நிறைவேற்றுதற்பொருட்டு, சமாஜ அத்தியக்ஷர்களும், அங்கத்தினர்களும் முயற்சி செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்

66, சாமி நாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

கி. குப்புசாமி,
காரியதரிசி,
சைவசித்தாந்த மஹாசமாஜ ஆபீஸ்.

பிரகிருதி சாஸ்திரம்.

இரண்டாம் பாடம்.

(வெண்டாமரை உ, இதழ் கஉ, 280-ம் பக்கத் தொடர்ச்சி.)

இருவிதச் சக்திகள்:— வஸ்துக்களின் ஸ்திதியை மாற்றுகின்ற காரணத்திற்குச் சக்தி என்று பெயர் என்று முன்பு கூறினோமல்லவா?

அது அளி சக்தி, அழி சக்தி என்று இருவகைப்படும். அமைதியிலிருக்கும் ஒரு வஸ்துவை அசைவிலிருக்கச் செய்ய முயற்சிக்கும் சக்தி, அல்லது அசைவிலிருக்கும் வஸ்துவின் வேகத்தைப் பெருக்க முயற்சிக்கும் சக்தி ஆகிய இந்தச் சக்திகளை அளி சக்திகள் என்றழைக்கிறோம். அசைவிலிருக்கும் வஸ்துவை அமைதி யடையச்செய்ய முயற்சிக்கும் சக்தி அல்லது அசைவிருப்பின் வேகத்தைக் குறுகச்செய்ய முயற்சிக்கும் சக்தி ஆகிய இவைகளுக்கு அழி சக்திகள் என்ற பெயராயிற்று.

வஸ்துக்களின் ஜடத்தன்மையைச் சார்ந்து விளையும் காரியங்கள் :— வஸ்துக்களின் ஜடத்தன்மை அல்லது தமோகுண விசேஷத்தினால் அசைவிலிருக்கும் எதுவும் தானாகவே அமைதியுறாது, அதன் வேகமும் குறுகாது. இத் தன்மையை முன்னிட்டு உலகிற் பல சம்பவங்கள் நிகழ்கின்றன. அவற்றிற் சிலவற்றை எடுத்துப் பேசி ஆராய்வோம்.

அதிவேகமாக ஒருவன் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென ஒரு கல் தடுக்க அவன் குப்புறவிழுகிறான். ஏன்? அவன் ஓடும்பொழுது அவனது உச்சி முதல் உள்ளங்கால் வரை அவனது சர்வாங்கங்களும் அசைவிலிருக்கின்றன. பின்னர் அவனது பாதங்கள் மாத்திரம் கல்லினால் தடைசெய்யப்பெற்றிட, அப் பாதங்கள் அசைவற்று நிற்கின்றன. அப் பாதங்களைத் தவிர மற்ற உறுப்புகளின் அசைவோ தடுக்கப்படாமல் மேற் சென்றுகொண்டேயிருக்கிறது. ஆனால் அவ்வுறுப்புகளாலாகிய சரீர பாகம் அமைதியடைந்துவிட்ட பாதங்களோடு பிணைக்கப்பட்டிருப்பதால் அப் பிணைப்பு இழுக்கின்ற அழி சக்தியினால், அசைவில் பாதங்களைவிடச் சற்று மேற்சென்ற சரீர பாகத்தின் அசைவும் தடைப்பட்டுவிட மனிதன் முகங்குப்புற வீழ்கின்றான். இவ்வாறேதான் குதிரையின்மீது சவாரி செய்கிறவன் திடீரெனக் குதிரை நிற்கும்பொழுது அதன் முதுகின்மீது முகங்குப்புற விழுகின்றான். ஓடிக்கொண்டிருக்கிற ரெயில்வண்டியிலிருந்து பூமியிற் குதிக்கிறவன் ரெயில் ஓடுகிற திசை முகமாகத் தன் தேகத்தை நீட்டி விழுகிறான். எதிரெதிராகச் செல்லும் இரண்டு ரெயில்வண்டித் தொடர்கள் சந்திப்பதால் பெரிய விபத்துக்கள் நேரிட்டதாகச் சிறுபிராயத்தில் கேள்வியுற்றபோது இத் தமிழ் நூல் எழுதும் ஆசிரியன் மிக வியப்படைந்ததுண்டு. எதிரெதிராகச் செல்லும் இரண்டு வண்டித் தொடர்கள் சந்தித்தால், இரண்டு தொடர்களும் அசைவற்று நின்றுவிடவேண்டியது, அல்லது அதிகவேகத்தோடு செல்லும் வண்டித் தொடர் மற்றொரு தொடரைச் சுகமாகத் தள்ளிக்கொண்டு போகவேண்டியதுதானே, ஏன் வண்டிகள் உடைந்து

விழவேண்டும்? என்று அப்பொழுது புத்திக்குத் தோற்றியது. இவ் விஷயத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். வடதிசை நோக்கியும் தென்திசை நோக்கியும் இரண்டு தொடர்கள் ஓடுவதாக வைத்துக்கொள் வோம். இரண்டு தொடர்களின் முற்புறமிருக்கிற இரண்டு 'என்ஜின் களும்' (இயந்திர வண்டிகள்) திடீரெனச் சந்திக்கும்பொழுது தென் திசை முகமாக ஓடும் என்ஜினின் வேகத்திற்கு மற்றைய என்ஜினின் வேகம் அழி சக்தியாகிறது. அவ்வாறே வடதிசை நோக்கி யோடும் என்ஜின் வேகத்திற்கு எதிர் என்ஜினின் வேகம் அழி சக்தியாகிறது. ஆகையால் இரண்டு என்ஜின்களின் வேகங்களும் திடீரெனத் தடைப்படு கின்றன. ஆனால் இரண்டு என்ஜின்களுக்கும் பின்புறத்தில் தொடுக் கப்பட்டிருக்கிற பல வண்டிகளின் வேகமோ தடைசெய்யப்படாமை யால் அவ் வண்டிகள் மேற்செல்லுகின்றன. ஆனால் அவ்வாறு மேற் செல்லும்பொழுது முதல் வண்டி, வேகந் தடைப்பட்ட என்ஜின்மேல் பலமாக மோதி தனது வேகமுந் தடைப்படப் பெறுகிறது. ஆகையால் இரண்டாவது வண்டி முதல் வண்டியின்மீது பலமாக மோதுகிறது. அவ்வாறு ஒவ்வொரு வண்டியும் அதன் முன்புள்ள வண்டியில் மோதி யுடைந்து வீழ்கின்றது.

ஒரு வஸ்திரத்தில் தூசி படிந்திருந்தால் தூசியை அகற்ற வஸ்தி ரத்தை உதறுகிறோம். காரணமறிய, முதன் முதல் உதறுவது என்றால் என்ன என்றறியவேண்டும். வஸ்திரத்தை உதறுவது என்றால் வஸ்தி ரத்தின் ஒருபுறத் தானையைக் கையிற் பற்றிக்கொண்டு அதன் மற்றப் பாகத்தை விரைவாகத் தாழ்த்திச் சட்டென மேலே உயர்த்துவதாம். அப்படித் தாழ்த்தும்பொழுது தாழ்த்தப்படும் வஸ்திரமும் அதன்மீது படிந்திருக்கும் தூசியும் கீழ்நோக்கிய வேகத்தோடு அசைய, திடீரென வஸ்திரத்தின் கீழ்நோக்கிய வேகத்தைத் தடைசெய்து மேல் நோக்கிய வேகமாக மாற்றுகிறோம். ஆனால் அவ்வாறு மாற்றும்பொழுது வஸ்தி ரத்தில் தளர்ச்சியாகப் படிந்திருக்கிற வஸ்துக்களாகிய தூசிகளின் கீழ் நோக்கிய வேகம் மாற்றப்படாமல், அவை அவ் வேகத்தோடு கீழ்நோக் கியே செல்லுகின்றன. ஆகையால் அவை வஸ்திரத்தினின்றும் பிரிய வேண்டியதிருக்கிறது.

அடுத்த சஞ்சிகையில் உறழ்ச்சி என்ற ஓர்வித அழி சக்தியைப் பற்றிப் பேசுவோம்.

(தொடரும்.)

பாரதிபக்தன்.

இலக்கியப் ப்குதி.

யசோதர காவியம்.

இரண்டாவது சருக்கம்.

(வெண்டாமரை ௪, இதழ் ௪, 89-ம் பக்கத் தொடர்ச்சி.)

அபயருசி மாரிதத்த் மன்னனுக்குத் தம் வரலாற்றைக் கூறுகின்றான் :

அவந்தி தேயத்திலே, விளைபயன் அமரரும் விரும்பும் நீர்மையது ஆகிய உஞ்சயினி என்னும் நகரம் ஒன்றுண்டு. அந் நகரத்திலே கந்தடு களிறுபோல்வான் அத் தேய மன்னவன் அசோகன் என்பான், தன் வாழ்க்கைத் துணையாகிய சந்திரமதி என்னுந் தையலோடு அளவில் மகிழ்ச்சியுற்று இனிது வாழு நாளில், இந்துவோ ரிளம்பிறை பயந்த தென்னவே சந்திரமதியானவள் ஓர் ஆண் மகவைப் பெற்றனள். அக் குழந்தைக்கு யசோதரன் என்று பெயரிட்டார்கள். அவ் யசோதரன் இளங் களிறுபோலவும் புலிபோலவும் வளர்ந்து அரசிளங்குமரனாய் அமிர்தமதி எனும் அழகிற் சிறந்த ஓரணங்கை மணந்து அளப்பருங் களிப்பி லழுந்தினன். அவ் விருவர் முயக்கின் பயனாக அமிர்தமதி, யசோமதி என்னும் மைந்தனைத் தந்து மகிழ்ந்தனள். அம் மகவும் இளம் பிறைபோலும் வளர்ந்துவர, அசோகமன்னன் தன் மகன், பேரன் முதலியவர்களோடு குலவிக் களிப்புற்றிருந்தனன்.

ஓர் நாள் அசோகன் தனது வடிவத்தின் சாயலைக் கண்ணாடியிற் பார்த்தான். அப்பொழுது தன் தலைமயிரில் ஓர் நரை மயிர் இருக்கக் கண்டு வருந்தி, "இது இளமை கழிந்து முற்ற மூத்தமையைக் காட்டுங் குறியாகின்றது; வண்டளிர் புரைதிருமேனி மாதரார் இதனைக் காணின், இவன் நரைத்த கிழவனென்று வெறுத்து நீங்குவர்; இளமையின் இயல்பு இதுவாயின், நாம் வளமையில் இளமையை மனத்து வைப்பதேன்? நமது உறவினர் தன்மையும் இதுபோன்றதே; ஆதலின் இனி அரசுரிமையை விட்டொழிப்பதே தகுதியுடையது;

முந்துசெய் நல்வினை முளைப்ப வித்தலை
சிந்தைசெய் பொருளொடு செல்வ மெய்தினும்
முந்தையின் மும்மடி முயன்று புண்ணிய
மிந்திர வுலகமு மெய்தற் பாலதே."

என்று மனத்துள் நினைத்தனன். இங்ஙனம் நினைத்த அசோகன், தன் மகனாகிய யசோதரனை யழைத்து அரசுரிமையை அவன்பால் ஒப்புவித்து முடிகவித்து, தான் தவக்கோலங்கொண்டு காட்டிற் சென்று, குணதரன் என்னும் பெரியாரை வணங்கி ஜினதீட்சை பெற்றுத் தவம்புரிந்திருந்தனன்.

யசோதரனும் தனது வெண்கொற்றக் குடை நீழலின்கண் உலகத்தைக் காத்துவந்தனன். பின்னர் அவன் செல்வச் செருக்கினால் மயங்கிப் பொறிவழி மனத்தைப்போக்கி, பொருள், இன்பங்களில் விழைவுற்று அறநெறியை முற்று மறந்துவிட்டனன். தோடலர்கோதை மாதர் பாடற்சுவையைப் பருகுவதாலும், அன்னமென் னடையாராடும் ஆடலைக் காண்பதாலும் இவ்வாறு நாட்கள் சில கழிந்தன. ஓர் நாள் யசோதரன் அரண்மனை மேல்மாடத்தில் அழகிய திரைகளுக் கிடையில் நறுமணப் புகை கமழும் பள்ளி யறையை யடைந்து, கற்றைவார் கவரிவீசக் களிசிறந் தினிதிருந்தான். அப்பொழுது,

சிலம்பொடு சிலம்பித் தேனுந் திருமணி வண்டும் பாடக்
கலம்பல வணிந்த வல்குற் கலையொலி கலவி யார்ப்ப
நலங்கவன் றினிய காமர் நறுமலர்த் தொடைய லேபோல்
அலங்கலங் குழல்பின் றாழ வமிழ்தமுன் மதிய ணைந்தாள்.

அங்ஙனம் அமிர்தமதி அரச னருகிற் சென்றதும், மாரவேள் மலர்க்கணை பொழிய, இருவரும் இன்பக்கடலி லிறங்கினர்.

மடங்கனிந் தினிய நல்லாள் வனமுலைப் போக மெல்லா
மடங்கல னயர்ந்து தேன்வா யமிர்தமும் பருகி யம்பொற்
படங்கடந் தகன்ற வல்குற் பாவையே புணைய தாக
விடங்கழித் தொழிவி லின்பக் கடலினுண் மூழ்கினானே.

இன்னரிச் சிலம்புந் தேனு மெழில்வளை நிரையு மார்ப்பப்
பொன்னவிர் தாரோ டாரம் புணர்முலை பொருது பொங்க
மன்னனு மடந்தை தானு மதனகோ பத்தின் மாறாய்த்
தொன்னலந் தொலைய வுண்டார் துயில்கொண்ட விழிகளன்றே.

அரசனும் அரசியும் இன்பக்கட லாடுதலால் களைப்புற்று நெடுநேரம் துயின்றனர். விடியற்காலமும் நெருங்கியது. அப்பொழுது அரண்மனைக் கருகில் யானைச் சாலையினின்று மிடற்றாற் பாடிய மாளவப் பஞ்சவப்பண் என்னும் இசைப்பாட்டொன்று வந்து அரசியின் செவியிற் புக்கது. புகுதலும்,

"வேயிடைத் தோளி மெல்ல விழித்தனள் வியந்து நோக்காத்
தீயிடை மெழுகி னைந்த சிந்தையி னுருகி னாளே."

அப்பாடலைக் கேட்டு மதிமயக்கங்கொண்ட அமிர்தமதியானவள் பொழுது விடிந்தும் ஒன்றையும் விரும்பாளாகி அவ் விசைபாடினவனைத் தன் மனத்தே யிருத்தித் தமியளாய் நின்றனள். அப்பொழுது அவ்விடம் வந்த குணவதி என்னும் தோழியானவள் அரசி நிற்கும் நிலையைக் கண்டு, "இறைவியே! நீ துணையற்றவள்போல் தனியே நிலைகுலைந்து நிற்கின்றனை; நின் உள்ளத்து எண்ணியது என்னே? அருளுக" என்றனள்.

அது கேட்ட அரசி அவளை நோக்கி, "இன்று விடியற்காலத்தே ஒருவன் அவனது இசையாகிய அங்குசத்தை அவனது வாயாகிய கையினாற் பற்றி என் உள்ளமாகிய மதம்பட்ட யானையை வருத்தித் தன் வயப்படுத்தினன்" எனலும், குணவதி அங்கு அவள் மனத்துச் செய்கையறிந்தும் அறியாதவள்போலவே கூறுகின்றனள்: "அரசியே! நின் பெருமை நன்று! நீ இரவிற் கண்ட தீய கனவினை மெய்யென்று நினைத்து உள்ளம் வருந்துகின்றனை, இஃதென்கொலோ!" என்றனள். அரசி, "நம் மனத்து உற்ற நோயை இவள் தெரிந்துகொள்ளவில்லை" என்று நினைத்து, அவ் விசை பாடினவனைக் கூடிக் களிக்கவேண்டுமென்னும் தன் கருத்தை அவளுக்கு நன்றாகத் தெரிவித்தலும், குணவதி செவி புதைத்து "நின் மனத்து இல்லாத சொல்லை நீ புனைந்து கூறுகின்றாய், இஃதென்கொலோ!" என்று மறுபடியும் வழுத்தினள். அதற்கு அமிர்தமதி அறைகின்றாள்:

"மாளவப் பஞ்ச வப்பண் மகிழ்ந்தவ னமுத வாயிற்
கேளல மாயி னுமுங் கேளல மாது மாவி
நாளவ மாகி யின்றே நடந்திடு நடுவொன் றில்லை
வாளள வொண்கண் மாதே மறுத்துரை மொழியி னென்றாள்.

எப்படியேனும் அவனைக் கூடி மகிழச் செய்யவேண்டும், இல்லையேல் என் னுயிரை விடுவேன்" என்று கூறும் அரசியின் சொற்களைக் கேட்டுக் குணவதி எண்ணுகிறாள். "அரசச் செல்வத்தையும், அளவற்ற இன்ப நுகர்ச்சியையும் இவட்கு அளித்த பிரமன் இவள் அறிவை மட்டும் இழிவாக்கிய செய்கை அந்தோ! கொடிது கொடிது! இவள் தலைவிதி யிருந்தவாறென்னே!" எனப் பலவாறு நினைந்து, ஒருவாறு துணிந்து, அன்று மழுங்கிரு ளிரவிற் சென்று, மாளவப் பஞ்சவத்தேன் ஒழுகிய மிடற்றையுடைய காளை யாங்குளனோ வென்று தேடிக்கொண்டு செல்லுகையில், அப் பண் பாடினவனாகிய பாகன் அட்டபங்கன் என்பானை யானைச் சாலையிற் கண்ணுற்று, தன் கண்ணையும் மூக்கையும் மூடிக்கொண்டனள். "இவனோ யானைச் சிறுநீரிற் கிடப்பவன்; கைகால்

குறைந்த தொழுநோயினன்; பேயுருக்கொண்ட இவனிழிவு தெரிந்தால் அரசி இவன்பாற் கொண்ட விருப்பு மாறி வெறுப்புக்கொள்வாள்" என்று நினைத்து மீண்டு தலைவியை யடைந்து விளம்புகின்றாள்; "தலைவியே! நீ மயங்குமாறு மாளவப் பஞ்சவப்பண் பாடினவன் நமது யானைப் பாகன், அட்டபங்கன் என்பான்; யான் அவன் உடம்பைப் பார்த்துக் கண்ணை மூடிக்கொண்டு திரும்பி வந்துவிட்டேன்;

நரம்புகள் விசித்த மெய்ய னடையினிற் கழுதணைந்தே
திரங்கிய விரலன் கையன் சிறுமுகன் சினவு சீறிற்
குரங்கினை யனைய கூனன் குழிந்துபுக் கழிந்த கண்ணன்
நெருங்கலு நிரலு மின்றி நிமிர்ந்துள சிலபல் லென்றாள்.

தீநாற்றம் பொதிந்த உடம்பெங்குமுள்ள புண்களைக் கண்கள் காணப் பொறா; விரல் குறுகி உருவழிந்த பெருநோயுடையான்; குலத்தினும் இழிந்தவன்; ஆதலின் அவன்பாற் செலுத்தும் உன் உள்ளத்தை மீட்டு உனது நிறையைக் காத்துக்கொள்" என்றாள் கோதவிழ்ந் திட்டவுள்ளக் குணவதி கோம்பனாளே.

இதனைக் கேட்டபின்னும் அமிர்தமதி அறைகின்றாள்; "இங்ஙனம் இயம்புவதாற் பயனென்னை? என தாசையோ முன்னமே அவனிடம் சென்றுவிட்டது; நல்லார் நெஞ்சம் எதை நாடுகின்றதோ அதுவேயெல்லாமாகும்; அஃதில்லாதபோழ்து, குலம், கல்வி, அழகு முதலியன பயனின்றாம்; காரிய முடிந்தபின் காரணத்தை யெண்ணுதல் பயனற்றதன்றோ? மாரவேள் எவரிடத்து நம் மனதைச் செலுத்த மலர்க்கணை சொரிவானோ அவனே நமக்கு அம் மாரனனையான் என்று நேரிழையே! நீ தாமதியாது சென்று என தெண்ணத்தை நிறைவேற்றுவாயாக" என்றனள். அது கேட்டலும் குணவதி,

தேவிநீ கமலை யாவாய் திருவுளத் தருளப் பட்டான்
ஆவிசெல் கின்ற வெந்நோ யருநவை ஞமலி யாகும்
பூவின்வார் கணைய னென்னே புணர்த்தவா றிதனை யென்னா
நாவினா லுனைந்து கூறி நடுங்குபு நடுங்கி நின்றாள்.

இவள் இழிந்தவனது சேர்க்கையால் பழிப்புக்கிடமாய்க் கெட்டழிவாளென்று குணவதி தன் மனத்தி லெண்ணியும் அரசியின் வேண்டுகோளை மறுக்க்முடியாதவளாய்த் துணிந்து சென்று யானைப்பாகனை யழைத்து வந்து குறிப்பிட்ட ஓர் தனியிடத்தி லிருக்கச்செய்து இவளையும் அவனிடம் சேர்ப்பித்தனள். அரசியும் யானைப்பாகனைக் கூடிக் களித்தனள்.

இவ்வாறு கள்ளவழியால் இன்ப நுகர்ச்சி நடைபெற்று வருநாளில் அரசன், தன் மனைவி தன்னிடம் முன்போற் களிப்பதின்மையைக் குறிப்பினாலுணர்ந்துகொண்டனன். அதன் காரணம் அறிதற்பொருட்டு அரசன் ஓர் நாள் அமளியில் பொய்யுறக்கங்கொண்டனன். அதை அரசி அறியாளாகி மெய்த்துயில் என்று நம்பி, இன்ப நுகர்ச்சியின்பொருட்டு அவ்விடம் விட்டுக் குறியிடம் சென்றனள். அரசன் அஃதறிந்து துயிலொழித்து வாளைக் கையிலேந்தி, மயிலைப் பின்பற்றிச் செல்கின்றவாளரியேறுபோல, தன் மனைவியின்பின் அவளறியாது சென்று அவளது செயலினை யறிதுமென்று செறிந்தனன் மறைந்து நின்றனன்.

(வரும்.)

பத்திராதிபன்

சாத்திரப் பகுதி.

முக்திகோபநிஷத்

(வெண்டாமரை ௨, இதழ் ௨, 93-ம் பக்கத் தொடர்ச்சி.)

௨௬. விடப்பட்ட வாசனைகளையுடையதாகிய மௌனத்தைப் பார்க்கிலும் உத்தமமான பதவி இல்லை.

சர்வ வாசனா சூனியமான மௌனத்தைவிட வேறு சிரேஷ்ட பதமில்லையென்பது கருத்து. மௌனமாவது, பிரபஞ்ச தர்ம சம்பந்தங்களை விடுத்துப் பிரம்ம சொரூபமாயிருப்பவனுக்குக் கிடைக்கும் ஆநந்த தசை. சிலர் இம் மௌனமே தியானமென்பர்.

௨௭. இயல்பாகவே மலின வாசனைகள் இல்லாமற்போனபோது இந்த நேத்திர முதலிய இந்திரிய சமுதாயமானது பாகியங்களான தம் விஷயங்களில் பூர்வ சம்ஸ்காரத்தினால் உண்டான வாசனைகள் மாத்திரமே ஏதுக்களாக ஆகிப் பிரவர்த்திக்கின்றது.

இயல்பாக வாசனைகளில்லாத இந்தச் சக்ஷு முதலிய இந்திரிய சமூகம், பூர்வ சம்ஸ்காரத்தினாலேயே பிரேரிதமானதாகி, பாகியங்களான தம் விஷயங்களில் பிரவர்த்திக்கின்றது. ஆதலின் இந்த இந்திரிய விருத்திக்கு மனோ வாசனைகளே முக்கிய காரணமென்க.

௨௯. இந்திரிய சங்காதமானது அப்பிரயத்தனமாக வந்த சப்த முதலிய விஷயங்களில் எப்படி விருப்பமில்லாமலே பிரவர்த்திக்கின்றதோ அப்படியே தீரனான பிரம்மஞானி நியதங்களான காரியங்களில் திரும்பிப் பிரவர்த்திக்கின்றான்.

நேத்திராதி யிந்திரியங்கள் தம் விஷயங்களில் பிரயத்தனமில்லாமல் பிரவர்த்திப்பதுபோல, பிரம்ம ஞானியும் பிராரப்த வேகத்தினால் வரும் காரியங்களில் இச்சையின்றியே பிரவர்த்திக்கின்றானென்க.

௩௧. ஏ வாயு குமாரா! மனதினுடைய ஞானவிருத்தியில் ஞான சாக்ஷாத்காரத்தினாலே வெளியாகக்கூடிய அச் சமாதி தசைக்குத் தகுந்த அனுபவத்தை மனதின் உற்பத்திக்கு உபசாந்தியாயுள்ள பரம ஹம்ஸனை ஞானியை முனிவர்கள் அறிவார்கள்.

மனோ விருத்தியில் ஞான சாக்ஷாத்காரத்தினால் வெளியாகி அனுகூலமாயுள்ள முக்தாநந்தத்தைச் சித்த விருத்தி யுபசாந்தியாயுள்ள பரம ஹம்ஸனைப் பெரியோர் அறிவார்களென்க. திடமான சித்த சாந்தியுள்ள தசையை மோக்ஷ சாக்ஷாத்காரமாக ஞானிகள் சொல்லுவார்கள்.

அவதாரிகை.

இதுவரையும் மோக்ஷத்திற்கு, தத்துவஞானம், மனோநாசனம், வாசனாக்ஷயம் இவற்றை முக்கிய சாதனமாகச் சொல்லி, இம் மூன்றினால் வரும் விதேக முக்தி, ஜீவன் முக்தி தசைகளையும் சொல்லி, அத் தசைய தசையிலே யுண்டாகும் ஆநந்தத்தை விவரித்து, இனி மனதினுடைய உற்பத்தி நாசனப் பிரகாரங்களை அனுமானுக்குப் போதிக்கின்றார்.

௩௦. திடமாக அநேக சென்மங்களினாலே அப்பியசிக்கப்பட்ட அநித்தியங்களான பதார்த்தங்களினுடைய தியானத்தினாலே மிகவும் சஞ்சலமான மனது, பிறப்புக்கும் மூப்புக்கும் இறப்புக்கும் ஏதுவானதாகித் திட அபிமானத்தோடு பிறக்கின்றது.

அநேக சென்ம பரம்பரைகளினாலே பழக்கமான போகங்களில் சத்தியமென்னும் பாவனையினாலே சஞ்சலமாய் இந்த மனம் அந்தச் சம்ஸ்காரங்களோடு கூடி அநேகங்களான ஜன்மஜரா மரணங்களுக்குக் காரணமாகுமென்க.

௩௧. மலின வாசனைகளான கர்ம சம்ஸ்காரங்களினுடைய வசத்தினாலே கிரியாசக்தியாத்மகமான பிராணத்தின் சாஞ்சல்யமும், அதனாலே வாசனையும், அதனாலே சித்தமென்னும் பீஜமும், பீஜாங்குரக் கிரமமாகச் சம்சாரம் செய்யப்படுகின்றது.

வாசனைகளினால் பிராண சாஞ்சல்யமும், பிராண சாஞ்சல்யத்தினால் சம்சார வாசனைகளும், இந்தச் சித்த பீஜத்திற்கு, பீஜாங்குர நியாயமாக இவ் வபிமானம் விருத்தியாகின்றது. வாசனைகளும் பிராணஸ்பந்தமும் அநாதியாக இச் சம்சாரத்திற்கு ஏதுக்களாமென்க.

(வரும்.)

ஓர் ஆரியன்.

சுவிவேக தர்ப்பணம்.

(ஸ்ரீ சாந்தாநந்த சரஸ்வதி சுவாமிகள் ஆந்திர மொழியில் அருளியது.)

(வெண்டாமரை ௪, இதழ் ௧, 72-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேலும், சத்துவ குணம் நற்றருமத்தினாலே உண்டாகும். நற்றருமமானது சுருதி, மிருதிகளில் விதிக்கப்பட்ட விஷயங்களையெல்லாம் நன்றாக விசாரிப்பதினால் உண்டாகும். அந்த விசார ஞானம் சற்சன சகவாசத்தால் உண்டாகும். சற்சன சகவாசம் காமாதி அரிஷட்வர்க்கத்தை நிக்கிரகித்தலினாலே உண்டாகும். அரிஷட்வர்க்க நிக்கிரகம் பூத தயையினாலே உண்டாகும். பூத தயை ஈசுவர அனுக்கிரகத்தினால் உண்டாகும். ஈசுவரானுக்கிரகம் எப்படி உண்டாகுமெனில், அவனுக்கும் நமக்கும் ஜன்னிய ஜனகத்துவம் என்றும், பிராப்பிய பிராபகத்துவம் என்றும், ஆதிபத்தியாதிபத்தியமென்றும், பிரேரிய பிரேரகத்துவம் என்றும், வேத்திய வேதகத்துவம் என்றும், அம்சாம்சகத்துவமென்றும் ஏற்பட்டுள்ள ஷட்வித சம்பந்தத்தைத் தெரிந்துகொண்டு சற்பக்தி செய்தால் அவ்வனுக்கிரகம் உண்டாகும்.

ஜன்னிய ஜனகத்துவமாவது: ஈசுவரன் மாயா விருத்தியினால் நம்மை ஜனிக்கச் செய்தவன், நாம் அவித்தியா விருத்தியினால் ஜனித்தவர்களென்பது. பிராப்பிய பிராபகத்துவமாவது: ஞான கர்மாதிகளினாலே நாம் அவனை அடையவேண்டியவர்கள், அவன் நம்மைத் தன்னிலே சேர்த்துக்கொள்ளவேண்டியவன் என்பது. ஆதிபத்தியாதிபத்தியமாவது: நாம் அவனது லீலாவிபூதிக்கு உட்பட்டவர்கள், அவன் நம்மை ஆள்பவன் என்பது. பிரேரிய பிரேரகத்துவமாவது: நாம் புண்ணிய பாபங்களுக்கு ஆசிரயமான சுவர்க்க நரகங்களை அடைபவர்கள், அவன் கர்மானுசாரமாக நம்மைச் சுவர்க்க நரகங்களை அடைவிப்பவன் என்பது. வேத்திய வேத

கத்துவமாவது: நாம் இந்திரியங்களுக்குக் கோசரங்களான பதார்த்தங்களையெல்லாம் கிரகிக்கவேண்டியவர்கள், அவன் நமக்குப் பதார்த்தாபிஞானத்தை உண்டாக்குபவன் என்பது. அம்சாம்சகத்துவமாவது: நாம் அவனது சொரூபத்தினுலே உற்பவித்தவர்கள், அவன் நம்து உற்பவத்திற்கு ஆசிரயமானவனென்பது.

உலகத்தில் சாதாரணமாகக் கணவன் மரணமடைந்தபோது, பாணிக்கிரகண சம்பந்தமுள்ள பதிவிரதையும், தமது குலத்தவருக்கு ஆபத்து நேரிட்டபோது சாதி சம்பந்தமுள்ள பந்துக்களும், ஏழைகள் முதலியவர்க்கு ஏதேனும் தொந்தரவு நேரிட்டபோது தருமாத்துமாக்களான சற்புருஷர்களும் அத்தியந்த பிரியமான தமது சரீரங்களைத் துரும்புகள்போலெண்ணி ஒப்புக்கொடுக்கும்போது, தயாமயனும் தீனபந்துவுமாகிய பரமேசுவரன் தன்னிடத்துச் சற்பக்தி செய்யும் ஜீவகோடிகளுடைய துக்கங்களையெல்லாம், நீக்கி மோக்ஷத்தைக் கொடுத்துக் காப்பாற்ருமல் விடான்.

(வரும்.)

பத்திராதிபன்.

கலைமகள் கழகத்திற்கு நன்கொடை.

புதுவை, கலோனியல் காலேஜ் ப்ரொபஸர் ஸ்ரீமான் வே. தம்பி-புருஷோத்தமப்பிள்ளையவர்கள் குமாரத்தியும், நீண்டநாளாக நமது கலைமகளில் "பாலசிக்ஷை" என்னும் அரிய வியாசத்தை யெழுதிவருபவருமாகிய ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாளவர்கள், ஜிகினு வேலைசெய்து அழகமைந்த பெரிய சாஸ்வதிபடம் ஒன்று நமது கழகத்திற்கு நன்கொடை யளித்தார்கள்.

புதுவை ஜவளி ஸ்ரீமான் தி. நாராயணசாமிமுதலியாரவர்கள், திருக்கோவையார் என்னும் புத்தகம் ஒன்று நமது கழகத்தின் புத்தக நிலையத்திற்கு நன்கொடை யளித்தார்கள்.

அன்புகூர்ந்து இவற்றை யுதவிய இப் பரோபகார சீலர்களுக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்ருர்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,

கழகக் காரியதரிசி.